1905

MARM Sonaiappa chettiar

Pallatur (RD)

உ

கடவுள் துணை.

மநுநீதிகாதல்.

விநாயகர் துதி.

யானைமுகவானையுமை யாளனார்பாலகனே
ஞானமுதலானகுரு நாதனே-மானிலத்தில்
ஆதிமனுநூலினுறை யாததனையானுமொரு
காதலெனவோதவருள் காண்.

புத்திவருமெஞ்ஞானப் போதமுறும்புண்ணியமுஞ்
சத்தியமாமேன்மைமிகத் தங்குமே-நித்தநித்தம்
சாதினையதாய்ப்புவியில் சாமிநாதன்சொல்மநு
நீதிநூல்பார்த்ததால் நிதம்.

வாணி துதி.

பூமேவுலோகம் புகழுமநுநீதிநூல்
பாமேவுசெஞ்சொற் பயனறிந்துயான்பாட
மூலகணேசன் முளரிபதம்போற்றி
வாலைசரஸ்வதியென் வாக்கிலிருந்தருள்வீர்

அவையடக்கம்.

வேதமுறைசொன்னதிந்த மேதினியிலுள்ளமநு
நீதிமுறைதன்னை நிகழ்த்தினார்முன்னோர்கள்

வள்ளுவனாரௌவைமுதல் வழுத்துமநுநீதி
தெள்ளுதமிழ்க்கடலிற் சிற்றகப்பைமுகந்தாற்போல்

மாலைசதக மநுநீதிசாரமென்றும்
ஞாலமதிற்கவிஞர் நவின்றார்பலநூலால்

பண்ணும்பலநூலிற்பாடும்பொருளதனை
எண்ணியெந்தன்சிந்தைக் கிசைந்தேயறிந்தமட்டும்

ஞாலமதிலுதிரும் நவமணியெல்லாப்பொருக்கி
மாலையாய்க்கோர்த்த வகையாகவிந்நூலைக்

காதலுடனியானுமொரு காதலெனப்பாடிவைத்தேன்
மாதவத்தோர்முத்தமிழின் வல்லோர்மனமகிழ

ஆக்கியோன்பெயர்.

மாவளஞ்சேர்செம்பி வளவாடன்மிக்கான்
பூவைசியனென்னும் புகழ்படைத்தகங்கைகுலன்

மநுநீதி காதல்.

ஆதிவையைசங்குமுக மாறைந்தான்ராம
நாதவேள்பாலன் நளினகவிரஞ்சிதவான்

சீலமிகுமமுதர்ச் செந்தமிழின்பாவிலஞ்சொல்
மாலோனரு சிறந்த மாபாரதப்ரசங்கன்

கையுற்றநெல்லிக் கனிபோலறியவென்று
தெய்வச்சிலையானுரைத்த தெள்ளமிர்தமாமிதுவே

உற்றதொருகாவேரி யொன்றாய்ப்பெருகிவரச்
சிற்றாறல்நீருமதிற் சேர்ந்தங்கேயோடுதல்போல்

சந்திரனுடம்பரத்திற் றாரகைகள்வாழ்வதுபோல்
செந்தமிழோர்முன்னே சிறியோனுரைத்ததமிழ்

புன்சொற்குகலையுங்கள் பிள்ளைமொழிபோல்மகிழ்ந்து
என்னசொலிதனிலித மின்பமெனக்கொண்டருள்வீர்.

நூற்பயன்.

சத்தியாசத்தியமுஞ் சாதிமுறைமார்க்கங்கள்
உற்றதொருதர்மங்க ளுதவியுதவாமை

தன்மனைவிமைந்தரொடு தகமையுடன்வாழ்வதுவும்
பின்மனைவிவேசியர்கள் பேதத்துள்ளாவதுவும்

மானமீனம்வாழ்வு மகிழ்ச்சியுடன்வஞ்சகங்கள்
தானுமுயர்கீர்த்திப்ர தாபம்பரிமளிததல்

துற்பிறவிதுற்சனர்கள் சோரமுடனுக்கினைகள்
நற்பிறவியாயுள்விர்த்தி நற்பதங்கள்நல்லறிவு

கற்பனைகளொப்பனைகள் கயவர்குணவிலக்கம்
எப்போதுந்தாளாண்மை யென்றுநடவாமை. ௨௰

காலத்தின்கற்பனைகள் கடவுளால்நிர்ணயங்கள்
ஞாலமதில்நன்றியுட னற்றவர்பத்திமுத்தி

சீதேவிமூதேவி சேரிடங்கள்தானுமனு
நீதிமுறைவறுமை நிச்சயமாய்சேரிடங்கள்

சேராவிடம்லோபி சின்னத்தின்பாங்குகளும்
பேரானமாதா பிதாவவர்களாவதுவும்

இருந்துமிறந்தோர்க ளிறந்துமிறவாதார்
மருந்துதவும்பண்டிதத்தின் மார்க்கமனத்தூக்கஞ்

சுத்தமசுத்தங்கள் தோகையரிலட்சணங்கள்
மெத்தப்பெரிதரிது மெலியதானங்கொடிது

மிஞ்சுங்கொடுமையினால் மின்னார்களாசையினால்
வஞ்சகத்தினாலிறந்தோர் மாறுதபேறுபெற்றோர்

இத்தகைமையாவதுட னின்னமின்னம்பலதாய்
சித்தமுடன்முந்நூலோர் சொன்னபடியேயுரைத்தேன்

நன்னயஞ்சேரிந்நூலை ஞாலமெலாந்தானறியச்
சொன்னதொருபாட றுரையுமோராயிரமாம்

பாடினேனிந்நூலை பயனறிந்தவுத்தமர்க்கு
ஈடுண்டோநல்லறிவுக் கின்னதொருநூலுளதோ

வேதியரொழுக்கம்.

ஆரணங்களோதுவதும் யாகாதிசெய்வதுவும்
மீறுகாயத்திரியால் வினையெல்லாந்தீர்ப்பதுவும்

கல்லும்பிருதிமிக கானமாந்தாம்பூலம்
எல்லாச்சுலையுதருளெர் தும்படிமுடித்தால்

நன்னயமாய்மாரிபெய்து நாடுசெழிப்பதுவும்
மன்னர்செங்கோலு மறையோர்மகிமையன்றோ

அரசரொழுக்கம்.

தேசத்தியற்கை தெரிந்தமனுநீதி
வாசற்பிறதானி வாய்மைகுறிப்பறிதல்

தன்னுயிர்போலமன்னுயிரைத் தற்காத்தல்சத்தியமாம்
மன்னுங்குடிகளிலே மாறுவபிமானம்

வங்கிஷத்திலுள்ளோர் மகிமைகுறையாமல்
தங்கள்குலத்தைத் தாதாரமாய்க்காப்பதுவும்

காலமிடமறிதல்மிக் கானதர்மசிந்தனைகள்
தாலமிசைகீர்த்திப்ர தாபம்பரியளித்தல்

தேவபத்தியுடன் சிட்டாபரிபாலனமும்
மேலவராந்துட்டர்களை விரைந்தடக்குமாக்கினையும்

மாசனங்கல்மீதிலபி மானமதுபன்னுங்கும்
ராசநீதத்தி னலமென்றுரைத்திடுமாம்

வர்த்தகரொழுக்கம்.

தானறிந்தவாணிபமுந் தப்பாநிறைவசன
மானவரோதயத்துக் கதிகஞ்சிலவழியார்

கணக்கிலணுவும்விடார் காரியத்திலேசெலவும்
இணக்கமுடன்செவ்வா ரிசைவார்க்கிசைவார்கள்

பொய்யுரையும்பேசார் போற்றிப்பொருள்சேர்ப்பார்
வையகத்தில்மிக்கான வணிகர்குலமார்க்கமிதாம்

மறையோர்க்குமங்களமு மன்னவர்க்கும்வல்லபமுந்
துறையாதவர்த்தகர்கள் கொள்வினையும்விற்பனையும்

வேளாளரொழுக்கம்.

ஆகமவேதங்கள்தே வாலயம்விளங்குவதும்
மேகம்வருஷிப்பதும் வேந்தர்கள்செங்கோன்முறையும்

பாரிலேதர்மபரி பாலனங்கள்யேனுமுயர்
சூரவலுவுத் தொழிலாளர்சீவனமுந்

தாளாதகீர்த்தியுடன் றராணியில்வாழ்வெல்லாம்
வேளாளர்தங்களது மேழிபெருமையன்றோ

தருமநீதி.

அறத்திற்பெரிதுமில்லை யதனையணுவளவும்
மறப்பதுவேகேடன்றி மற்றுமுயர்கேடுளதோ

தர்மாதர்மம்ரெண்டுஞ் சதகோடிநாட்செயினும்
அம்மாத்திரமு மனுபவித்துத்தீருமன்றோ

எண்ணும்பலபொருளு மிகத்திற்கும்வாராது
புண்ணியபாவங்கள்ரண்டும் போவதில்லையுன்னைவிட்டு

பொன்னுடையாபரணம் பூதானமீந்தாலும்
அன்னதானத்துக் கதிகமுறுதானமுண்டோ

தன்னூற்சுயமாயோர் தர்மந்துடங்குவதில்
முன்னோர்செய்தர்மத்தை முக்கியஞ்செய்தலுத்தமமாம். ௫௰

பாவபுண்ணியமிரண்டும் பல்லாக்கின்கீழ்மேலும்
போவதுவேசெய்த புண்ணியமும்பாவமுமாங்

கோணுதணுவளவுங் குறையாதவாழ்வதற்கு
ஆணிவேரென்பதுவு மறமென்றுசொல்லுவதாம்

உண்ணறியவாழ்வு மெய்தும்பெருந்தவமாம்
புண்ணியமொன்றில்லாதேல் புனல்நிறைந்தகாடாகும்

ஏதாகிலுந்தர்ம மெவருந்தான்செய்யவென்றால்
ஏதாகிலுமனதுக் கிசைந்தபடியேகொடுத்து

வாக்குசரீர மதனூற்சகாயங்கள்
ஏர்க்கவேசெய்வோர்க் கிகபரம்வந்தெய்திடுமே

எத்தர்மமானதற்கு மிடையூறுசெய்தவர்கள்
புத்திருமத்தியமாய்ப் போவார்நகரமதில்

மன்னருளநீத மதனிற்பதின்மூன்றும்
முன்னமேசொன்னமின்ன முண்டுமதின்மூன்றுரைப்பார்

சேனைகுடியுஞ் சினேகமுமந்திரியும்
ஆனபலவேளாண்மை யதனுடனேயிவ்வாறும்

மிச்சமறிவீகை மேலுந்தயிரியமும்
உச்சாகமென்ப துடனேயிவைநான்குந்

தூங்காமைகல்வி யுடனேயிம்மூன்றும்
நீங்காமல்வேணும் நிலமாளரசருக்கு

யானைகுதிரைபடை யானுடனேயாலயங்கள்
ஆனநல்லதர்மமதி னிணைவுடனேயிம்மூன்றும்

ஏழைக்கிரங்கி யெப்பிழைகளும்பொறுத்தல்
மீளவேதீர விசாரித்துத்தெண்டனையுந்

தக்கமரியாதை தயவுங்குடியினிலே
இக்குணங்களெல்லா மிருக்குமகதராசாவை

ராசசிங்கமென்பரிவர் நாட்டினிற்பசிபிணியும்
மாசிலையாம்வருமை வாராதென்றேயுரைத்தார்

தான்செய்யுந்தர்மந் தனக்காகமுன்னோர்க
ளானபேர்தர்மத்தை யபகரித்துக்கொண்டாக்கால்

துன்னடக்கையென்றுமகா தோஷம்வந்துசூழுமென்று
நின்மலமாமென்று நிகழ்த்தினார்முந்நூலை கூய

ஆலரசுவேம்பிதுமூன் றானதிலேயொவ்வொன்று
மேலும்விளாநெல்லி வில்வமதில்மும்மூன்றும்

அன்பாகதெங்கு மாமைந்துமா புளியில்
ஒன்பதுடனொன்றுமீ தொன்பதையும்வைத்தவர்க்குத்

தரணியிலேயெந்நாளும் தக்கபுகழ்விளங்கும்
நரகமிவர்க்கில்லையென்று நவின்றார்மநுநூலில்

அன்னைதந்தைசுற்றங்க ளாதியிலேநம்பினவர்
முன்னுதவிசெய்தவர்கள் மிடிமையுற்றுவந்தவர்கள்

தக்கபெரியோரைச் சரணமென்றடைந்தவர்கள்
மிக்கவெளியோர்கள் மேனளிற்சேவகரை

கைநழுவச்செய்யாமற் காப்பாற்றுமுத்தமர்க்கு
வையகத்தில்வாழ்வெய்தும் வம்மிசமும்விர்த்தியுண்டாம்

தன்னுயிர்போல்மன் னுயிரைத் தற்காத்தவுத்தமர்க்கு
என்னென்னபாவம்போ மிகபரம்வந்தெய்திடுமே

மாமறையோரேமுதலோர் மற்றுமுள்ளோர்தங்களுக்கும்
சேமமுடனென்னெய் தேய்ப்பவர்கள்தங்களுக்கும்

மறையோர்க்குத்தொண்டுசெய்து மாதாவைத்தெய்வமென்போர்
கறவைதனைக்கண்டவுடன் கையாற்சொரிபவர்க்கு

எண்ணமற்கோடி எக்கியங்கள்செய்தவெகு
புண்ணியம்வந்தெய்துமென்று புகன்றார்மநுநூலில்

தர்மாக்கர்தங்குடியைச் சுத்தமாகக்கொடுத்து
நன்மார்க்கமுள்ளசில நற்குடியைகாத்திடலாம்

அறக்குடிப்பத்தானாலு மவர்கடனைக்கொடுத்து
சிறப்புற்றபட்டணத்தைச் சீர்திருத்திகாத்திடலாம்

வீடானபட்டணத்தை மிகவுமங்கேகெடுத்து
நாடானதைக்காக்க லாகுமதிற்பாவமில்லை

என்றுமுன்னாள்மாயவனு மேபரவானைப்பலியாய்க்
கொன்றிடப்பாண்டவர்க்குக்கூடியதிவ்வாராகும்

தீபமொன்றுலட்சந் திரிகொளுத்தினாலுமந்தத்
தீபங்குறையாதசெய்கைபோலெந்நாளும்

தலமீதிலோயாத் தான்தருமஞ்செய்தவற்கு
மலர்மாதலுண்டாகும் வாழ்வதுவுங்குன்றாது

நன்மையேதர்மமதி னாலேவரும்தாழ்வு
துன்மைவருவதில்லை தூயமனேகுன்றாது

துன்மைதர்மத்தாற் றுலங்கும்பெருவாழ்வு
நன்மைதரமாட்டாது நல்விர்த்தியாகாது

தர்மம்பொருள்கிடைத்த தற்காலஞ்செய்யவென்று
வருமைவந்தால்தர்ம மதுசெய்யக்கூடாதே

காய்பழங்கள்பூவிலைகள் கதித்தமரங்களிலே
வாய்வுசென்றால்நற்கனிகள் மட்டுமுதிராமல்

தக்கபழங்காய்பூ தளிர்முதலாயுதிரும
பக்குவம்போர்கெற்பமுதற் பயந்தமனுக்களிலே

சாலக்கிழவர்மட்டுஞ் சாவதன்றிமற்றெவரும்
ஞாலமிசைச்சாவதில்லை யாக்குமென்றென்னவொண்ணா

என்னவயதானாலு மியல்புவரும்வேளை
நன்னயஞ்சேர்தர்மஞ்செய் தாலிதுவேயுத்தமமாம்

பண்டுசெய்தபுண்ணியமும் பாவமென்றுஞ்சொல்லும்விதம்
ரண்டுமனுபவிப்பா ரெக்காலமானாலும்

நமக்குள்ளதைச்சமைத்து நாமுண்டுவந்தபிறர்
தமக்குங்கொடுக்கின்ற தர்மமேமுக்கியமாம்

மநுநீதி காதல்.

வாசற்கதவடைத்து வைத்துண்பார்க்குச்சொர்க்க
வாசற்கதவு மாறாதடைத்திருக்கும்
உப்பிலாக்கூழுமுளமகிழ்ந்து தான்கொடுத்தால்
ஒப்பிலாப்பாலமிர்த மொக்குமென்றார்முன்னோர்கள்
பகைவன்கொடுங்கோபி பாலமிர்தமீந்தாலும்
மிகவானநஞ்சாநஞ்சுக் கெட்டிக்காய்வொப்பிடலாம்
ஓட்டைக்குடத்திலிட்ட வுதகம்போனாற்போல
நாட்டமவர்வாழ்வு நாளுக்குநாள்குறையும்
கூடிவருங்காலங் குறிப்பறிந்துதம்மாலே
கூடுமட்டுந்தானங் கொடுத்தாரேயாமாகில்
வானிலேபோகும் வழியடைக்குஞ்சல்லென்று
கோனுதவாயமை குறளிலேசொன்னாரே
ஆறிலொருகடமை யரசர்க்காமைந்துபங்கு
சேரும்விருந் தசுற்ற தெய்வம்பிதிர்தமக்காம்
இல்லறத்தில்வாழ்ந்தா லிவ்வாறுசெய்யவென்று
வல்லமைசேர்வேதமுறை வள்ளுவருஞ்சொன்னாரே
பாவத்தாற்பொன்தேடிப் பலதர்மஞ்செய்தாலு
மேவுற்றபுண்ணியங்க ளொள்ளளவுமவாராதே
தர்மத்தார்தேடித் தாதாமுங்கண்டறிந்து
தலைமையுடனவந்தோர் தமகருவிருந்தளித்து
இன்னமவருவிருந்துக் கெதிர்பார்த்திருக்கின்ற
கன்னயவானவீட்டத லட்சுமிதன்வீடாகும்
பூமியிலேயத்தேகறும் பொட்டதேயுண்டானல்
தாமேதானைஸ்வரியந் தன்னாலேகூடிவரும்
எப்போர்களாறேனு பெவ்வேளைவந்தாலும்
கூர்ப்பாத்தயபாலே கூடுமட்டுமீந்தக்கால்
இருந்தாலிறந்தாலு மென்னாளுங்கீர்த்தியுண்டாம்
பிறந்தாலுமேலாம புகழுடைவாழ்வுமுண்டாம்
தர்மங்களாவதுதான் தர்மவானசெய்வதல்லால்
காமிகளுக்கெய்தாதெக் காலமுந்தானசெய்பவனும்
எத்தர்மமானாலு மீதைக்கிணையில்லை
மற்றெல்லாம்பின்னென்று மனுநீதியிலுரைத்தார்

மாரிசிறப்பு.

மண்ணினுறு தவங்கள் மாதானமற்றனைத்தும்
விண்ணினறுமேபோனல் விழலாகும்வாரிமுதல்

வாரிவளமு மானிலத்திற்புற்பூடுஞ்
சீர்பெருந்தானவந் தேவாலயச்சிறப்பும்

மன்னர்முதலானவர்கள் வாழ்வுமவர்வாழ்வும்
மன்னுமுயர்வானமதில் மாரிவளமாமன்றோ

இல்லறம்.

வெல்லறங்கள்செய்துகன வேள்விமுடித்தாலும்
இல்லறத்தின்வாழ்வுக் கிணையாவதொன்றுமில்லை

மூர்த்தியென்றமூவருக்கும் மூன்றுளிறந்தவர்க்கும்
பார்த்திபர்க்குந்துறந்தார் பலமுபற்றியாளருக்கும்

இயல்பிறைவிவ்வா ரிவர்க்குத்துணையெனவும்
நயமாகுமென்றுகூற ளானதிலேசொல்லினரே

மட்டில்லாவாழ்விருந்தேன் மனைதனக்குமுக்கியமாம்
இட்டமூறுபெண்சாதி யென்பவளேமுக்கியமாய்

சற்குணமுந்தெய்வபத்தி தர்மசிந்தைகற்புடமை
இக்குணங்களுள்ளா ளிருக்குமந்தவீட்டினிலே

வற்றுதுசெல்வமவள் வாயால்மாரிபெய்யென்று
உத்தரஞ்சொன்னு லுலகமெலாமாரிபெய்யும்

தானுமனையாளுமொரு தர்மமதுசெய்பதன்று
தானவர்கள்வேறுபட்ட தர்மமதுசர்மமல்ல

செல்வநிலையாமை.

நினைத்தபொருணீங்கி நினையாப்பொருளென்று
மனைத்துமதுதானே யப்படியும்வந்துவிடும்

நிலையாகத்தோற்றுகின்ற நிலவதுவும்போயிருளாம்
கனஞ்சேசிருணிலவாய்க் காட்டுதற்கப்பாலும்

இரவும்பகலாகும் பகலுமிரவாகும்
பெரிதானமேடங்கே பேராறுயாகிவிடும்

ஆறதுவுமேடாகு மணல்நிலத்திலோடம்வரும்
வாரிசுவரியதில் மனலுமிகச்சூடாகும்

வேண்டுநிதியோ ரெளியோருமாவார்கள்
மீண்டுமெளியோரு மேலோருமாவார்கள்

தகமைசெறிவாழ்வுந் தாழ்வுஞ்சதமல்ல
தகடுபோற்சுற்றிவருந் தாழ்வதுவும்வாழ்வதுவும்

தெய்வச்செயல்.

பேராசையாலே பிரயாசைப்பட்டாலும்
வாராதுவாராது வருவதுவும்போகாது

எங்கேபோனாலு மியாவரிடஞ்சென்றாலும்
பங்கமுறைத்துப் பலரைமிகநொந்தாலும்

அழுதுதொழுதாலும் அநேகநாள்தெய்வத்தைப்
பழுதாயுரைத்தாலும் பயனேதுமெய்தாதே

ஆழக்கடலி லமுக்கிமுகந்தாலும்
நாழிவரும்நாழியிலே நானாழிநீர்வருமோ

பூர்க்குமரஞ்செடிகள் பூவாநாட்பூவாது
ஆர்க்கும்விதியையன்றி யாகையினால்வாராதே

ஆலிற்புறாவிரண் டங்கிருக்கவோர்வேடன்
சிலமுடனெய்வதற்குச் சிலையிற்கணைதொடுக்க

பாயவந்ராஜாளிப் பட்சியதுமேலுலவத்
தூயபுறாவின்மேற் தொடுத்தகணைவிலகி

ராசாளிபட்சியுட லானதிலேதைத்துவிழ
பாசமுறுவேடன் பதத்தில்விஷந்தீண்ட

வேடனும்ராஜாளியுமாய் வீழ்ந்துவிடவேயொரு
சோடப்புறாவிரண்டுந் துன்பமறவாழ்ந்ததுவே

இத்தகமையாய்முடியு மீசன்செயலாவதற்கு
அத்தாட்சியாமென் றருளினார்முந்நூலோர்

அண்டரமுதுண்ண வரனுமேநஞ்சையுண்டான்
கொண்டல்வண்ணன்காடுறைந்து கோதைதனைப்பிரிந்தான்

வேதன்சிரமிழந்து மிப்பார்சிறையிருந்தான்
ஆதியிலேயிந்திரனு மங்கமெலாங்கண்ணானான்

சக்கிரேசனானவரிச் சந்திரனும்பெண்டிரும்
மிக்கதொருநாடிழந்து விலைபட்டுத்துன்பமுற்றார்

மன்னுநளராசன் மனைவிதனைப்பிரிந்து
தன்னுடையநாடிழந்து தன்வடிவுகுன்றினனே

இவரடவியுற்ற ராகையாலாரேனும்
வெய்யோன்விதிதனையே வெல்லவெவரால்முடியும்

பூபாரந்தீர்த்த புயல்வண்ணன்வேடன்கை
ஆபாணமபட்டிறன்று வாதைக்குள்ளாகினனும்

ஆனைபறவையுட னரவமிம்மூன்றும்
சேனைமனிதர்கையிற் சிக்கிமெலிவதுவும்

நல்லகதிர்மதிகள் ராகுகேதாற் றயருறலும்
வல்லதர்ப்பவானுக்கு வறுமைவந்துசூழ்வதும்
பாக்கியமுள்ளனுக்கோர் பாலகனில்லாததுவும்
போக்கற்றவேழைக்குப் புத்திரருண்டாவதுவும்
நல்லோர்க்குப்பொல்லாத கண்டப்பெண்டாவதுவும்
பொல்லார்க்குநல்லகுணப் பெண்பலியாவதுவும்
ஓரிரண்டோரொன்பதிலு மூழினிதிப்பயனும்
வீரர்க்குபேடைவர்க்கு மிலபதன்பஞ்சபனும்
ஆசாச்செயலுக்கு மயலார்பொருள்களுக்கும்
வாகாகவாசைமிக வைத்தால்வருவதில்லை
வாழ்வதுவுந் தாழ்வதுவு மனமறவருப்பிறவரும்
ஊழ்வினையின்வாறன்றி யுத்திபுத்தியாலாமோ
ஏலவேவந்தபோ மின்பதன்பாற்றுபோல்
குடமிசைப்பின் னுமிதுவரவைப னுபவிப்பார்
காலிதிரளிலோரு கன்றுதனைவிடுத்தால்
பாலித்தேயீன்ற பசுவறிந்துசேருதல்போல்
ஓடியொளிந்தாலுமங் குற்றமுன்வினைதான்
தேடிப்பிடிக்குமென்று செப்பினார்முன்னோர்கள்
எக்காலஞ்சென்றலு மிறவாதபேரில்லை
மிக்கவிதிவசத்தை வெல்லுபவர்களாருமில்லை

சகபோசனம்.

தாளாண்மையென்னுந் தகைமைகளைச்சீர்தூக்கில்
வேளாண்மைக்கொத்ததில்லையென்றுசொல்லினரே
வேந்தர்தமையடுத்தோர் வேளாண்மைசெய்தவர்கள்
சார்ந்தவனையல்லகள் தன்னருகில்சஞ்சரிப்போர்
பருவாருஞ்சந்தன மரம்வனத்திற்சமுத்திரத்தி
னருகேயிருப்பவர்க ளாவின்பாலுள்ளவர்கள்
சகடுடையாக்கினர தன்னைபயிரிடுவோர்
மிகவுமித்தவெண்மருக்கு மேலானபஞ்சமில்லை

நற்சகோதரர் துற்சகோதரர்.

தம்பியர்மேலன்புடையோன் தர்மராயர்
தம்பிமேல்சத்ருவதி தாக்கீவன்வாலியுமாம்
நற்றுணையாந்தம்பியர்கள் லட்சுமணன்பரதன்
உற்றுவிதுரதர்ம ருடன்பிறந்தவர்களாம்

சுக்ரீபனுனவனுஞ் சுயோதனன் விபீஷணனும்
தக்க[illegible]புகழ்பூவுலகில் தமயனுக்குச்சத்ராதி
பண்பாவுடனபிறப்பிற் பகையுறவிதாகுமென்று
முன்பாகநீதிநூல் முறையினுரைத்தனரே

அரசிற்புகழ்பெற்றோர்.

மனுவிட்சுவாகுவுடன் வாகான அம்பரீஷன்
கனைதபெருமான தாதா கார்த்திகார்ச்சுனன்பரதன்
விருககச்சியுடனே விந்தச்சிவிந்துவுடன்
மறுக்கப்பகீரதனும வாணனமுசுகுந்தனுடன்
சீராப்புகழ்பாதி கேவேந்திரனுடனே
பாசிற்றசரதனும் பாண்டவர் ஐவர்களும்
சத்யவரிச்சந்திரனுட தானைநிருச்சக்கு
உற்றநளனவிதுர ஜெனகபுரூரவனும்
அன்னுள்ளிலேபிரக லாதனுடனபாலிபெலியு
மன்னுஞ்சடாயுகுகன் வசாய்விபீஷணனும்
ஆறைந்துபேரு மகிசபூசாபலாய்ப்
பாரிற்புகழ்பிரவுக்திப் பரமபதமுற்றவராய்
ஏற்கைபெருககிரள் வெறிலிவிஸ்வாமித்திரமுனி
மார்க்கமுடனமாணிக்க வாசகருமாபெலியும
வின்னையில்லாவள்ளுவரும் வேடனென்னுங்கண்ணப்பன்
தனனுலெழுவர்களுந் தானவராய்ப்பேருபெற்றார்

நல்லறிவு.

தீயினாற்சுட்டபுண் தீருஞ்சிலபருந்தில்
வாயினாற்சுட்ட வடுவொன்றுமாறாதே
ஏற்கையுடனபுகழா டெய்தாதசென்மபலன்
தீர்ககமுடனேமறு ஜெனமமெடுக்காமைநன்றாம்
மண்ணிற்பிறப்பதெல்லா மாயிலதுவேகாட்டுக்
கண்ணுமுளவாய்ச்சொல்லாற் சாதிபறிந்திடலாம்
சிறியோரிணக்கம்விட்டுத் தீங்கொன்றுஞ்செய்யாதே
பெரியோர்தமையடுத்தாற் பேதமென்றும்வாராதே
தூய்பகிரகப்சித்திய சோபனத்தினால்விளங்கும்
வையகத்துராசாககள் மனுநீதியாற்செலிப்பார்
நாறியர்கள்சற்குணத்தி னலேவிளங்குவர்கள்
கூனம்விதரணனுங் கொடையால்விளங்குவனும்

பாரிலென்றும் பகல்விளங்குமாவிரவிற்
காரிருளையும்விளக்குங் காந்தியுமாமதியாம்

பதிவிளங்கும்பொன்றாலே பார்விளங்குமேகமதால்
சதுராய்பணைவிளங்குந் தங்கள்புயவலியால்

குடியேவிளங்குவது கொற்றவர்களால்நீதி
நெடியதலம்விளங்கு நெஞ்சிலுற்றநல்லறிவால்

புகழாற்கொடைவிளங்கும் போசனத்தாலுயிர்வழங்கும்
புகழிடைநன்னூலாற் புத்திமிகவேவிளங்கும்

சொர்க்கமென்று துற்சனரைத் தோழமைகள்செய்யவேண்டாச்
சந்தேகமுற்றதாரு தையலாரைச்சேரவொண்ணா

சார்பில்லார்க்கில்லைநிலை தயவிலார்க்கறமுமில்லை
ஊரிலார்க்கரசுமில்லை ஊணில்லார்க்குறுதியில்லை

மாடில்லாதார்க்கிந்த வையகத்தில்வாழ்வுமில்லை
கூடுமுதலில்லார்க்குக் கொள்ளல்விற்றலிலாபமில்லை

துற்சனர்க்குநேசமில்லை சுகமில்லார்க்காசையில்லை
இச்சகத்திநன்மைதனக் கெப்போதழிவுமில்லை

மனதின்குறிப்பை வதனத்தாலறிந்திடலாம்
அனைவோர்குணநடத்தை யதனாலறிந்திடலாம்

சபர்முகத்திற்சூரன்வலு தன்னையறிந்திடலாம்
தமர்சேரும்வல்பிணியைத் தாதையறிந்திடலாம்

கல்விபிரசங்கத்திற் காணலாங்கவிஞர்திறம்
சொல்வண்மையாற்சாதி தோற்றமறிந்திடலாம்

மாணிலத்தில்பூண்டுகளை மழையாலறிந்திடலாம்
தானுநல்லார்பொல்லாரைச் சந்ததியாற்கண்டிடலாம்

கண்ணிரண்டாம்யாவருக்குங் கற்றோர்க்குமூன்றுகண்ணும்
எண்ணுந்தியாகிகளுக் கேழுகண்ணாகுமல்லோ

மனங்குவிந்துஞான மகிமையறிந்தவர்க்கு
அனேகங்கண்ணாகுமென் றருளினார்முன்னோர்கள்

தர்மவான்றன்னிடத்திற் றங்காதுபாவமுந்தான்
கர்மிதுன்மார்க்கரிடங் கனத்ததர்மமில்லாது

நெருப்புக்குமுன்குளிரு மில்லாதுதான்மிகுந்து
கருத்தவிருள்மணியுங் கதிரோன்முனில்லாது

சத்தியத்தைநாளு மசத்தியமும்வெல்லாது
புத்திகெட்டகோபம் பொறுமைதனைவெல்லாது

புண்ணியத்தைப்பாவமொரு போதுமேவெல்லாது
மண்ணில்விஷங்கெருட மந்திரமுனில்லாது

சந்தனகஸ்தூரி தாம்பூலமாடைமுதல்
விந்தைசேரியாபரண மிவற்றையெவரீந்தாலும்

ஏற்போரொருகையா லேற்றுரேயாமாகில்
கூர்ப்பாய்க்கொடுப்பவர்க்குக் குறையாதவாயுசுண்டாம்

செகமுழுமையுந்தானே தேவாதீனமாகும்
மகவானதெய்வமது மந்திராதீனமதாம்

மந்திரமாமதுவே மாமறையோராதீனம்
சந்ததனுசோமாமறையோ சகலருக்குந்தெய்வமென்பார்

பாலன்னமானாலும் பண்பில்லாக்கூழுணினும்
மேல்சுத்தமாய்க்கால மிகவறிந்துண்ணனன்று

நல்லோருக்குற்றதுயர் நன்மைசற்றுமில்லாத
பொல்லாதான்வாழ்வொரு போதுநிற்கமாட்டாதே

பாம்புகடுநெருப்பிற் பழகிப்பிழைப்போர்கள்
மேன்பாடுக்கொப்பாகு மென்றார்மனுநூலோர்

ஊமைக்குத்தோன்ற உபாயங்கள்சொல்லுவதும்
காமிக்குஞானக் கதையெடுத்துச்சாற்றுவதும்

துட்டனுக்கெத்தனையோ சொல்லிநன்மைசெய்ததுவும்
முட்டாளுக்குற்றநிச முள்ளதைசொல்லுவதும்

இன்பர்கவிகடனை ஈயார்மேற்பாடுவதும்
அன்பில்லாசோரஸ்திரீ யாசையால்மெலிவதுவும்

நலத்தைக்கொடுப்பதில்லை நன்றாகாதிவ்வாறும்
மலைக்கல்லிலேயெறிந்த மண்பாண்டமாகுமல்லோ

ஐந்தானபாவத்தி லானவிரண்டுகலம்
ஐந்திலேமூன்றை யவ்வளவுசொன்னானாகாதாம்

தெய்வகதாலாகா தெனினுமுயர்ச்சியிலே
மெய்வருந்தக்கூலிதரு மென்றனரேமுன்னூலோர்

இத்தனைநாள்நம்வீட்டி லேற்றும்விளக்கென்றணுகி
முத்தமிட்டாற்கன்ன முடையெழும்பச்சுட்டுவிடும்

உற்றகுலத்தெய்வநமக் கொன்றுசெய்யாதென்றுபொய்பாச்
சத்தியமும்பண்ணினாற் றான்விடவுமாட்டாது

தூங்குவதுபோலுந் தூங்கிவிழிக்கின்ற
பாங்கதுவுமாமிந்தப் பாரிற்பிறப்பிறப்பு

கூட்டினுன்னேயிருந்து குருவிப்பறப்பதுபோல்
கெட்டமுடம்பினிமேல சிவனிருந்ததுசெயல்

கொல்லாமை.

கொல்லியென் றனெஞ்சிற் குறியாதான்வாணுள்மேல்
மலைவாயுயிருண்ணு மறலிவரமாட்டானே

நல்லோர்பெரியோர்க்கு நாயகமேயாவென்னில்
கொல்லாமையெனபதனைக் குறித்தறிந்தவுத்தமராம்

தானநீதிஞானதன் தந்தைதாய்சற்குரு
யானோர்மனையாட்டி மறையோர்புராணிகரை

சுத்தமுள்ளவீரர் குலந்தகவிலானோர்
உற்றதபோதனர்க ளுயர்குலத்தோர்பாலர்கள்

சாலவிகடப்பிர சங்கிபிணியாளர்
ஞாலநிலைவறுமை யாளர்பதினெண்மரையும்

எப்பிழைகள்செய்தாலு மிராசர்முதலானவர்கள்
சாப்பனையுந்தண்டனையுந் தான்செய்யலாகாதே

கொடுநரகடைவோர்.

நீதியுள்ளராசர்களை நீதிவழுக்குரைப்போரை
ஆதிகுருவானவரை யவருடையசிஷரையும்
சோதிடஞ்சொல்வேதியரைத் துன்பங்கள்செய்தவரை
யோகரியபண்டிதரில் லோரெழுவர் தங்களையும்
தீதானவஞ்சகங்கள் செய்தாரேயாமாகில்
தீதாய்க்கொடுநரகிற் சேர்வார்கள் திண்ணமிதே
அன்னமளித்தவருக் கவகேடுசெய்தவர்கள்
மன்னர்தமையடக்கி வைத்தவமைச்சர்களும்
நன்றிமறந்தவரும் ராசாக்களைச்சமரில்
ஒண்டியாயவிட்டே யொளித்தோடிப்போனவரும்
மாதாபிதாகுருவை வசையாய்நிந்தித்தவரும்
வேதாகதிமாதவத்தோர் மெய்ந்நாகமைவத்தவரும்
தெய்வமிழந்தவரும் இன்னமுதலாகப்
பொய்சொல்லோரன்னியர்தம பொருட்காசைப்பட்டவரும்
பாரில்விசுவாசப் பாதகமேசெய்தவரும்
சோறுண்டவீட்டுக் கிரண்டகங்கள்செய்தவரும்
பன்னிருவர்தாமும் பரிதிமதியுள்ளளவும்
கரையில்லாத நரகிற்குடியிருப்பார்

சோதிடஞ்சொல்வோருந் தொடுவழக்குத்தீர்ப்போரும்
பேதமில்லாபண்டிதரும் பிராயச்சித்தம்விதிப்போர்

நீதியுரையாம லிரண்டகமாய்ச்சொல்வாரேல்
ஆதீனமும்பாழாம் பாழ்நரகமெய்திடுவார்

பார்க்குமலைகடலின் பாரமதுபாரமல்ல
பார்க்குவிசுவாசப் பாதகனுமென்பவனும்

கற்றதுரோகியுடன் காணுமிவரிருவ
ருற்றசுமையேயென் றுலகமாதஞ்சுவளாம்

அக்கினியிலேயுமிழ்ந்தோ ராறுபேராமிவர்க்கு
மிக்கதொருகொடிய வியாதிவரும்பின்னரகம்

தண்ணீரிலம்மணமாய்த் தான்போவோரதிற்புணர்ந்தோர்
உண்ணீரிலேயுமிழ்ந்தோ ருறுமலமும்நீர்விடுத்தோர்

அசுத்தமுடனேதா னாலயத்திற்செல்வோர்கள்
ந்சமாகச்சந்ததியி னேராய்க்குடியிருப்போர்

போற்றுகின்றதேவதையின் பூசைக்கெனக்கொணர்ந்து
சாற்றுதபுட்பந் தனையெடுத்துச்சூடினவர்

தீராப்பிணியடைந்து செகத்திலிம்மூவர்களும்
மாறுவறுமையுமாய் வன்னரகஞ்சேர்வார்கள்

மேற்குலத்துகீழ்குலத்து மின்னாருடன்பிறந்தோர்
ஆகுலமுண்டாகி யழிவர்குலவிர்த்தியற்று

கண்காதுக்கெய்தாத கடுஞ்சொல்லைச்சொன்னவர்கள்
மண்மேல்குலத்தோடு வன்னரகஞ்சேர்வார்கள்

கெடுமதியாலெடுத்தர்க்குக் கேடுநினைத்தவர்கள்
குடும்பமோசமாய்க் கொடுநரகஞ்சேர்வார்கள்

மன்னர்நிரூப மதுதனையேதள்ளியிட்டோர்
அன்னைதந்தைச்சுற்றத் தவர்கள்தனையடிப்போர்

எளியர்தனையடைந்தோர் யியல்புரியும்வஞ்சகர்கள்
பழியாளர்கோளர் பழிபுனையரெண்மரையும்

மண்டலத்தில்மூன் றுபிறை மட்டும்பொருத்தப்பாற்
தெண்டனைகள்செய்வதுவே தேசமன்னர்நீதியதாம்

உரியவிவகாரம்வந்தா லுற்றார்பகைஞரென்றும்
பரிதானையெய்துசம் பந்தரிவரேழையென்றும்

பாராமல்நீதியாய்ப் பாங்காய்விசாரித்து
கூராய்ச்சகமண்செய்த கோல்போலிருதலையும்

சிறையாசிறைத்தவர்க்கு சிமிழிகாலம்வரை
குறையாமல்வாழ்வுமவர் குலமுமிகவிர்த்தியுண்டாம் ௨௪

துஷ்டசங்கிரகம்.

சாதிமுறைதவருஞ் சண்டாளர்கற்புடைய
மாதைவிரும்புவிசு வாசமில்லாபாதகர்கள்
கோள்கள்மிகுந்தவர்கள் கொலைஞரொடுமூர்க்கர்
நாளும்பகையாளர் நாசனத்துரோகிகளைச்
ஏழைதமையடித்தோ ரிகல்விளையுஞ்சண்டைகளைச்
சூழும்பணிகளொடு துஷ்டமிருகந்தீய
தொண்டமைதீராத கோபப்பதினாறு
மன்றடக்குவதல்லா லதிகரித்தால்வெல்லரிதே
துற்சனரும்பொன்னுந் தாரகதமுந்தோற்கருவி
மிச்சமுறுநரம்பின் வெங்கலமாழக்கருவி
மானமில்லாமூளிக்கு மானரவர்களையும்
ஈணமில்லாக்கரும்பு எள்ளுடனேயீரைந்தும்
தெண்டித்தார்க்கெல்லாஞ் செயங்கொடுக்குமின்றிவற்றை
பண்டுவேடநூலிற் பகர்ந்தாரேமுன்னோர்கள்
தந்தைதாயானாலும் தன்குலமெல்லாம்விளங்கும்
மைந்தனேயானாலு மனையாட்டியானாலும்
மந்திரியேயானாலும் மாபள்ளோரானாலும்
பந்தமுடனமக்குப் பகையாளியென்றறிந்தால்
அன்றேயகத்திடினு மாக்கினைகள்செய்திடினும்
கொன்றாலும்பாவங் கொலையுமில்லையென்றனரே ௨௫

கோழையில்வஞ்சகரை சொற்கேளாமைந்தர்களை
மீளாச்சமர்முகத்தில் விட்டோடுஞ்சேவகரை
தன்னகர்க்குவஞ்சகஞ்செய் மந்திரியோடிவ்வறுவர்
மன்னேகொடுந்தண்டனையுஞ் சதியுமிகச்செய்திடலாம்

நல்லறிவு.

பூமிக்கரசர்தெய்வம் புருஷனேபெண்கள்தெய்வம்
சாமிக்குமாதர்தெய்வங் காசுபணம்லோபிதெய்வம்
தரித்திரனுக்கு கனங்கொடுப்பார்தெய்வமிந்தத்
தாரணியில்துஷ்டருக்குச் சவுக்கடியேதெய்வமென்பார்
நீதியுடையோனுக்கு நேயமேதெய்வமதாம்
ஆதிபரமே மனையோர்க்குந்தெய்வமதாம்

அன்னை தந்தைசுற்றத்தை யடர்ந்துமுனியவொண்ணா
பின்னொன்றுமுன்னொன்று பேசித்திரியவொண்ணா
வஞ்சகரைநம்பவொண்ணா வாக்கிரங்குபேசவொண்ணா
தஞ்சிப்பொறுமையிலாச் சண்டையினிற்போகவொண்ணா
வேளாவித்தைகற்றாலு மேதினியிலேவிளங்க
ஆணவமாய்க்கொஞ்ச பாடம்பரம்வேணும்
நீடுநதிகண்டிக்க நீங்கியநீந்தாலும்
ஓடந்தனையகற்றி யுககத்திற்செல்லவொண்ணா
ஞானமறிந்தாலு நாடோப்பனைகளாது
வானதுபோலேநடந்து மகிமைபெறவேணுஞ்
செம்பொற்குபேரனெனிலுஞ் சிவனத்திலேமுயற்சி
பண்புடனேநாளும் பண்ணியிருக்கவொண்ணா
வாசமுடனேவெகுவாய் வல்லமையுண்டாயிடினும்
ராசாக்கள்சேர்வை நலப்பெறவேணுமல்லோ
உரித்தானபுத்திமதி யூகியேயானாலும்
பெரியோர்கள்சொற்கேட்டுப் பின்சென்றிருக்கநன்று
பெற்றபிள்ளைதான்மூடப் பிள்ளையேயானாலும்
சற்றுகிலுங்கல்வி தான்வரவுசெய்யநன்றாம்
மெலிவாகியேயதிஷ்ட மில்லாதிருந்தாலும்
சலியாமலேமுயற்சி தன்னைவிடவொண்ணாதே
தீராதரோகமதால் தேகமெலிவுற்றாலும்
விராய்விழ்தத்தை விட்டுவிடலாகாதே
தனியேபொருள்தேடித் தனித்துன்னும்பாற்சோற்றி
லனையார்கிளையோடே யன்றுண்டகூழதிகம்
ஏசோர்மருந்து மில்லாரிடத்திலே
பேதைகளாச்சேவித்து பெறும்பொருள்கள்வாங்குவதில்
மானமரியாதையுடன் வையகத்தில்நல்லோராய்த்
தானுள்ளபேர்கொடுக்குந் தாம்பூலமேயதிகம்
வீணிற்பலவித்தை மெத்தவிரும்புசவி
லாணியாம்வித்தைக ளாக்கற்றலொன்றுநலம்
இன்னமுயல்மான்கள் இற்சிலதைவெல்லுமதி
ரான்னும்புலிக்குட்டி யொன்றைவென்றாற்கீர்த்தியுண்டாம்
அவிவேகியுடன்வெகுவா யானவுறவதிலும்
விவேகியைத்திருத்தல் மெத்தவுநன்றாகும்

தன்னுயிற்குவந்தலயந் தப்புவிக்கவேண்டுதற்கும்
பின்னும்பிறருயிரைப் பேணிடவேண்டுதற்கும்

மையல்கொண்டமாதருக்கும் வைபகத்திலஞ்சாமற்
பொய்யுரைத்தால்பாவமொரு போதுமில்லையென்றனரே

பின்னால்வெகுபொருளைப் பேருபளிப்பதிலும்
முன்னால்தருணத்தில் வீய்ந்தவரைக்காசுநன்றாம்

நாளையென்றும்பின்னையென்றும் நாட்கெடுவுசொல்லுவதில்
வேளையிதுவல்லவோ வென்றால்மிகவுநன்று

தெளிவானகல்விகற்றால் தேசம்வசியமதாம்
பழியாமரியாதை பாவலர்கள் தன்வசியம்

சித்தமதிற்பத்தியே தெய்வவசியமதாம்
உற்றப்பெருஞ்செல்வ முறவோர்தலைவசியம்

வேண்டும்பொருள்கொடுப்போர் வேசையர்கள்தெய்வமதா
மாண்டுகெட்டிக்காத்திருந்தா லரசர்வசியமுண்டாம்

சாந்தமொழுக்கஞ் சகலஜெனவசியம்
வார்த்தகமுநல்ல மனையாளுக்கேவசியம்

கூடியேவாழ்ந்தாலும் குழந்தைமிகப்பெற்றாலும்
தேடிப்பிதிர்களுக்குந் தெய்வத்துக்கிட்டாலும்

தானதர்மஞ்செய்தாலுந் தாழ்ந்தவர்க்குசொன்னாலும்
மானமுளநல்லோர்க்கு வணங்கிநடந்தாலும்

செய்தபிழைபொறுத்துத் தேசமதில்வாழ்பவற்கு
ஐயமில்லைவாழ்வதிக மப்பாலுங்கெற்பமதாம்

செய்தபிழைபொருத்துத் தேசமதில்வாழ்பவற்கு
துய்யவயித்தியங்கள் சோதிடங்கள்தங்களிட

மருங்காயெவையுமங்கே வைத்துவணங்கநன்றாம்
வெறுங்கையாற்போனால் விழலாங்கருமமெல்லாம்

பாரிலொருதாயார் பலபிள்ளைபெற்றாலும்
சீருமழகுந் திறங்குணமும்வெவ்வேறும்

பயிரிடுவோர்தங்களுக்குப் பாரில்வருமையில்லை
தயிரியமுள்ளவர்க்குத் தானோர்பயமுமில்லை

உற்றசெபஞ்செய்வோர்க் கொருநாளும்பயமுமில்லை
நித்திரையில்லாதார்க்கு நேரும்பயமுமில்லை

தன்னவனுயிருந்து தப்பிதங்கள்செய்தாக்கால்
அன்னியனுமென்றெண்ணி யன்றேயகற்றநலம்

அன்னியனாயினுந்தன் னன்புள்ளோனானக்கால்
தன்னவனென்றவனைத் தாபரித்துக்கொள்ளாமல்

நல்லோர்க்குமுன்னாலோர் நன்மைசெய்காலதற்குப்
பொல்லாவொருநூறு பிழையும்பொறுப்பார்கள்

அற்பர்க்கெழுநூறதிகநன்மைசெய்தாலும்
சொற்பவொருபிழைதான் செய்தாற்பொறுக்காராம்

செய்ததவத்தளவே செல்வமதுவுண்டாகும்
எய்துங்குலத்தளவே யிருக்குமவர்குணம்

கற்றோர்நலஞ்சிறந்த கன்னியர்களன்புடையோர்
நற்றவங்களுற்றவர்க்கும் ராசாக்களானவர்க்கும்

சாதிவரம்பெண்ணா தனுசரிக்கவேண்டுமிந்த
நீதிமுறையென்று மநுநீதிநூலோதிடுமாம்

இன்பக்கவிமூட ரிடத்திற்படித்தாக்கால்
நண்பில்லைசற்று மதற்கும்பழுதுசொல்வார்

கற்றோரருமைதனைக் கற்றோரறிவதல்லாற்
சுத்தமலடிபிர சூதியயரறிவாளோ

பஞ்சரித்துவீண பரிசுபெறுவதினு
மின்சொல்லாற்பிச்சை யெடுத்துண்ணநன்றாகும்

வீம்பானசத்ராதி மெய்யன்றிருப்பதிலும்
பாம்போடுறவுமிகப் பண்ணுவதேநன்றெனலாம்

கண்ணென்றுரைப்பதிரு கண்ணதுவுங்கண்ணுமல்ல
எண்ணப்படுதேனை யெழுத்தென்பதுவேகண்

கைப்பொருளேபொய்ப்பொருளாங் காலவரைநில்லாது
மெய்ப்பொருளாந்தான்கற்ற வித்தைநீங்காபொருளாம்

வாழ்வுமிகவந்திடினும் வம்மிசத்தின்மார்க்கம்போல்
தாழ்ந்துநடப்பவர்க்குத் தாழ்வுசற்றும்வாராதே

யானைதனதென் றடாதுசெய்யப்போகாது
தீனதைமிகுந்து தின்றாலுங்கேடெய்தும்

ராசருரியரென்றுநடத்தைபொருமைசெய்தால்
ஆசாரமேன்மையும் அவதியும்வந்தெய்திடுமே

இல்லாரையுள்ளவர்களேசியிழுக்குரைத்தால்
நல்லதல்லநஷ்டநயம் ராட்டினம்போற்சுற்றிவரும்

தேசமதிலேழைபர தேசிமறைவேதியரை
ராசர்காவாவிட்டா னன்றல்லபாவமுமாம்

சாகாவரம்பெற்றவர்க்குப்பயமில்லை
வாகாகப்பேசாத மௌனிக்குச்சண்டையில்லை

வித்தைகற்றால்தந்தையால் மேதினியெல்லாம்புகழும்
கற்றதொருவித்தையது கற்பகத்துக்கொப்பாகும்

மெத்தவழகுடையோர் மேற்குலமேயானாலும்
வித்தையொன்றுமில்லாவிட்டால் விரைவில்லாபூவாகும்

இருந்துமயிர்களுந் தேசமன்னர்பல்கான்கும்
இருந்தவிடம்பிரிந்தா லிவைகளுக்குமேன்மையில்லை

மின்னாரில்தாசி வேதியர்நாய்கோழியுடன்
தன்மைசேர்பண்டிதர்கள் சாதியொத்துவாழார்கள்

ஒக்குபொருட்சேகமுயிர்க்கேசதம்வந்தணுகில்
சாங்கமுடன்சிரித்தாற் றயிரியம்வந்தெய்திடுமாம்

தர்மசிந்தையுள்ளோர்க்குந் தயாளபுருடனுக்கும்
எம்மாத்திரம்பொருளு மில்லாளுமோர்துரும்பு

வீரமிகுசூரனுக்கு மேலவர்சேனை துரும்பு
பாரிற்றுறவிகட்குப் பார்த்திபனுமோர் துரும்பு

பெரியோருக்கற்பர்கைப் பிரயோசனம்துரும்பு
அரியகலைவாணியரு ளடைந்தோர்க்கவிதுரும்பு

தூற்றிலொருசேவகனும் நூற்றுப்பத்தாயிரத்தில்
பார்த்தாலொருவன் பாவாணனெனன்பவனும்

பாங்கானவார்த்தைசொல்வோன் பதினாயிரத்தொருவன்
நீங்காதகொடையாளி லட்சத்திலேயொருவன். ௯௨

சினமென்பதென்பதொரு சிக்காமதையறுத்தால்
மனமென்பதென்பதற்ற வாறேமுடித்திடலாம்

அரிதானமாதவங்க ளனேகமாய்ச்செய்தாலும்
பொறுமையென்பதில்லாதேற் போமேவீழலாக

எத்தர்மமானாலு மெண்ணித்துணிதனன்று
மிக்கத்துணிந்தபின்னர் மேலெண்ணிறலிழுக்காம்

பட்சிக்காசுபலம் பாலருக்கழுகைபலம்
மச்சத்துக்கேசலமாம் மன்னர்க்குதேர்பலமாம்

வாகனங்கள்தானுடையான் வழிநடைக்கஞ்சானும்
வாகுடனேபானுடையான் வந்தவிருந்துக்கஞ்சான்

வஸ்திரமுள்ளான்சபையில் வரப்போகவஞ்சானும்
உற்றபணக்காரனெவர்க்குமஞ்சானும்

மானிற்கவரி மயிர்தடுத்தாலேகாது
மானபரனவ்வாறய் வசையணுவுங்கேளானும்
மேஷந்தனக்கு மிரண்டுசெவியுமறுத்து
மாசுபடத்தேக மயிர்முழுதையுங்களைந்து
குடுகுட்டியும்பின்னே தொடர்ந்துவரும்வாரதுபோல்
கேடுகெட்டமாண்பர் கீர்த்திகளுக்கஞ்சாரே
மச்சுவிடால்நிழல் யானூர்தனக்கோடு
நிச்சயமாய்க்களைற்று நீதர்மிவைநான்கும்
கட்டாகச்சீதள காலத்திலுஷ்ணமதாய்
திட்டமுடனுஷ்ணத்திற் சீதளமுமாகுமல்லோ
சாதித்தொழில்செய்வார் தனக்குக்கெடுதியில்லை
மாதவமாய்கால மறிந்துசெபஞ்செய்பவர்க்கு
ஏதேதுபாவங்க ளில்லையொருநாளுமென்று
நீதிமனுநூலி னிகழ்த்தினார்முன்னோர்கள்
பொன்னைத்தரிசித்தாற் போகமதுசம்பவிக்கும்
வன்னமலரைச்சேர்த்தால் வாசமதுசம்பவிக்கும்
பெரியோரைச்சார்ந்தவர்க்கு பெருமைமிகவுண்டாகுஞ்
சிறிதான துற்சனரை சேர்ந்தவர்க்குகேடுவரும்
விண்ணதனிலேயிருந்து விழுமழைத்துளிதான்
மண்ணிற்சுடுமிரும்பில் வந்துவிழுமுன்சுவரும்
தாமரையில்வீழ்ந்தாற் றுழாதுயராது
சேமத்திரைகடலின் சிப்பியிலேவீழ்ந்தாக்கால்
விலைமதிக்கவொண்ணாத வெண்முத்தையீனும்
தலமீதிலிவ்வாறு சற்பாத்திரமறிந்து
கொடுப்பதேதர்மமிந்தக் கூறறிந்துசெய்யாட்டால்
விடுப்பாய்கொடுப்பதெல்லாம் வீணாகுமென்றனரே
காரிருளிற்புற்றடியிற் கண்டபழுதைதனைச்
சீருமுயர்பாம்பென்று செப்புவார்தப்பாமல்
உத்தமர்கள்தாசிவீட் டோரமாய்ப்போனாலும்
சத்தியமாயுத்தமரைச் சமுசயமாய்ச்சொல்வார்கள்
வீணாகப்போகா விடந்தனிலேபோகவொண்ணா
தோணாமற்போனக்காற் றுன்பம்வரும்பின்னிழுக்காம்
தேசிவந்தாற்பசுவைத் தேடாரதிமோகத்
தாசிவந்தாற்றனது தாரமதைத்தேடார்கள்

ஆசையாலெப்பொருளும் அபகரிக்கவேண்டுவர்க்கு
ரோஷமில்லைகேடுகெட்ட ஹுத்தரிலும்ஹுத்தர்களாம்
அன்னைபிதாமூத்தோ ஞசானரசனுடன்
பின்னைப்பெரியோர்கள் பிராணசினேகிதர்கள்
ஆகவெழுவர்களு மழையாதிருந்தாலும்
போகலாமேவலியப் பிழையொன்றுமினமில்லை
பலைகானஞ்செல்லநன் றல்லாதுதான்தரித்த
கலைகிழித்துக்காவியிட்டுக் கௌபீனங்கட்டநன்று
ஓடெடுத்துவாங்கியே யுண்ணநன்றியாவர்களும்
நாடாவனத்தினிற்போய் நாவேதுநன்றாகும்
ஈயாதலோபியிட மேறும்புலவருக்கு
ஞாயமிதுவென்று நவின்றாரேமூன்றூலோர்
வெள்ளாட்டியானவளை விரகத்திலணைந்தால்
உள்ளகுலமும்போ யொழுக்கமெல்லாங்கெட்டுவிடும்
வேசையரைச்சேர்ந்தாக்கால் வெட்கமில்லைபொன்சேதம்
ஆசையாலேவிதவை யானவளைச்சேர்ந்தாக்கால்
ஆயிசுமேதான்குறையு மகல்வாளிலட்சுமியும்
தூயபிறர்தாரத்தைச் சோரத்திற்சேர்ந்தாக்கால்
வன்னரகஞ்சேர்வரிவை யாகாதுநாலுமென்று
முன்னோர்வடநூலில் முறையாயுரைத்தனரே
செல்லுமிடமானாலுஞ் செல்லாவிடத்தினிலும்
பொல்லாதகோபமொரு போதும்வைக்கலாகாதே
இன்னவகையின்றா லெய்துமெய்தாதெனவே
தன்னிலறிந்துசெய்யா தாராகினஷ்டம்வரும்
கள்ளுண்டாலுற்ற காரணமெல்லாம்வெளியாம்
கொள்ளையரும்பிற் கொலைகள்வந்துநேரிடுமே
சூதாடியிம்மையிலே துன்பம்வருமல்லாது
சேதாரமாகுந் திரவியங்களுள்ளதெல்லாம்
ஆகாயவீதிக்கு ஆதித்தன்ரத்தினமாம்
வாகானகல்விகற்றோ மாசபைக்குரத்தினமாம்
சயனந்தனக்குரத்னஞ் சார்ந்தவழகுள்ளபெண்கள்
நயமானவீடதற்கு ரத்தினஞ்சற்புத்திராம்
ஏமனைவென்றுசய மேற்பவராயானாலும்
மேன்மைசெறிபெரியோர் வெம்பகையொன்றாகாது

ஆருக்குந்திருமா தனுக்கிரகமுள்ளதுவும்
பாருக்குள்ளெந்தப் பகையுநெருங்காது

கூடாதகாலங் குறுகிவருங்காலம்
வீடானதிலிருக்கும் வினைவிளையுந்தன்னாலே

தாரித்திரர்பசி தாங்குவதேதமிக்ககொடை
ஏற்றபணக்காரர்க் கீவதுவேவட்டியுமாம்

எளியோருடனெதிர்த்தே யெண்ணாமல்வைவதிலும்
விழிகாணாதோடென்று விரட்டுவதேநன்றாகும்

அன்பிலாதாரிடத்தி லதிகவுறவதிலும்
பின்புமவருடைய பெருத்தபகைநலமாம்

வேண்டாப்பெண்டீரை வீணாய்வைத்தேசுவதில்
வேண்டாம்நீயென்று விரட்டிவிடலுத்தமமாம்

சாலவேவாழ்வுடையோர் சாவதற்கஞ்சுவராம்
சாலவருமையுற்றோர் சாவதற்கஞ்சாரும்

பாரிலேயீகையுள்ளோன் பாக்கியமெவ்வாறென்னில்
பூருவபட்சப் பிறைபோல்வளர்ந்திடுமாம்

ஈயாதான்செல்வமது எத்தனையுண்டாயிடினுஞ்
சாயுமமரபக்ஷ சந்திரன்போற்றேய்ந்திடுமாம்

என்னவறுமையுறினு மேற்பதொன்றில்லாவிட்டால்
அன்னவனேபாக்கியவா னாகுமென்றுசொல்லிடலாம்

பாரித்தசெல்வர்கள்தான் பலர்க்குதவியில்லாவிட்டால்
தாரித்திரரென்று தப்பாமற்சொல்லிடலாம்

கையானதுநமது கண்ணிலேகுத்திவிட்டால்
கையைத்தரிக்கின்ற காரணமுண்டோவதுபோல்

இளையோர்தமையடைந்தோ ரேதுகுற்றஞ்செய்தாலும்
பிழைபொருக்கவேண்டுவதே பெரியோர்முறைமையதாம்

அழகிளமைமூப்பு மயிஸ்வரியமிந்நான்கும்
வளமுடனே நம்முடைய மரணவரையில்லாது

நன்னயஞ்சேர்பாலுடனே நல்லதண்ணீருங்கலந்து
அன்னத்தின்முன்வைத்தா லாவின்பால்மட்டுமுண்ணும்

தண்ணீரைத்தள்ளுந் தன்மைபோலேயுலகம்
விண்ணாணமாயுரைத்தா லிந்தநூலைப்பாராமல்

எண்ணியேநுண்ணியனா லென்பதனைக்கற்றக்கால்
மண்ணிற்சுகமும்வரும் மறுமையிலேசொற்கமுறும்

இட்டமுறுமோகஸ்திரீ யேதிகழ்ச்சிசெய்தாலும்
திட்டியடித்தாலுஞ் சினம்வரவேமாட்டாது
இன்பம்பொருளுமிக வெய்துவதானுலுமதிற்
றுன்பம்வருமென் றறிந்தாற் சொற்பனத்திநேக்கவொண்ணு
பயனில்லாவார்த்தைசொல்லிப் பலநாளுங்கோளுரைத்தால்
தயவாயவர்செய்யுந் தர்மம்பலியாது
ஊரார்பகைதுன்ப மோயாமகாவறுமை
மாறுதெனவுமுன்னுள் வள்ளுவனர்சொன்னுரே
வாழ்வுள்ளோரானலு மாஞானியானலும்
தாழ்வுள்ளோரானலுந் தயிரியவானலும்
நாடொப்பனநெகிழ வாகாதொருநாளு
மூடத்தனமாக முன்பின்னய்ச்செய்பவரும்
அருபியுமான அலகையோடொக்குமென்றும்
பிறகவரைச்செத்த பிணத்தோடேசேர்க்கவென்றார்
பொருளில்லாதார்க்கிந்தப் பூமியிலேகீர்த்தியில்லை
அருளில்லாதார்க்கு அவ்வுலகத்தேதுமில்லை
ஊன்தின்பவர்க்கு வொருபோதருளுமில்லை
தானதன்மஞ்செய்தாலும் சாம்பரிலேவிட்டநெய்யாம்
வாக்கிலொன்றுபேசி மனதிலொன்றுவைப்பதுவும்
யார்க்குநல்லாரென்றுகள்ள வாசாரஞ்செய்வதுவும்
காமக்குரோதமுற்றுங் கன்னியரைக்காதலிப்பார்
மேன்மைச்சடைவளர்த்து வெண்ணீற்றைப்பூசிடுவார்
தாடிவளர்த்து தலைமொட்டைசெய்திடுவார்
பாடிப்படித்துப் பாதுகையின்மேல்திரிவார்
மகத்திவருமல்லவல்ல வாய்ப்பிழைப்புக்குத்திரியும்
செகச்சாலக்காரரிவா சித்தியொன்றுமில்லையென்பார். ௩௯௦
ஆவென்றபாவமொன்று மற்றூர்பிறவியரும்
சீவன்முத்தனுகுமென்று செப்பினர்முந்நூலோர்
பிறவுயிரைக்காத்தல் பேதமில்லாமனது
விரதபங்கமில்லாமை வெகுளாண்மையிநான்கும்
தவமிதுவாமென்றுந் தங்குமெய்ஞ்ஞானமென்றுஞ்
சிவயோகியாவமென்றுஞ் செப்பினர்வள்ளுவரும்
மன்னவரேயானலும் மற்றெவர்களானலு
மென்னவிதமாமோ ரிடர்வருமென்றேயறிந்தால்

கைத்தானயமதனைக் காறாமற்போனாக்கால்
மகத்தானவாழ்வுகெடும் மாணிலத்திற்றுன்பமுண்டாம்

மாறினிலையும் வல்பிணியுந்தீக்கோளும்
வேறுபகைவர்கள்வர மேலுமேவற்பகையும்

வாராதுதற்கால வகையறிந்துதீர்ப்பவரை
ஆராய்ந்தறிந்து அவரைத்துணைக்கொள்வதாம்

ஈகையில்லாமாந்த ரிருந்தென்னிறந்தென்ன
ஆகையாலேமிருக மதனிலேசேர்க்கவென்றார்

தலமீதில்மிக்கான சாத்திரங்கள்கற்றாலு
முலகவியற்கைதனை யொன்றும்விடலாகாது

இல்லாதாரானாலு மிருந்துமுலகவளம்
வல்லமையாய்ச்செய்தவரே மாதவருக்கொப்பாகும்

வலியாரெளியாரு மானவான்மூவரிட
மலிவானகோபங்கள் வைத்தாரேயாமாகில்

காடாளும்லட்சுமியும் ராசர்பகைநேருங்
கேடாய்முடியுமென்று கிளர்த்தினாளவ்வையுந்தான்

எப்போதுங்கீர்த்திசற்று மில்லான்றனைச்சுமக்கும்
வெப்பினாற்பூமி விளைவுகுன்றிப்போய்விடுமாம்

குற்றமில்லாமற் கொடுத்துபுகழ்தேடாரை
செத்தபிணத்தோடே சேர்க்கவென்றார்வள்ளுவரும்

காலம்.

தந்தைதாய்புத்திசொன்னாற் றள்ளிமுனியுங்காலம்
சிந்தனையாய்சற்குருவை யிகழ்த்துங்கொடுங்காலம்

பெரியோரைத்தூஷணித்துப் பேய்க்குதவுமிக்காலம்
அரிசிவனைசிந்தனையா யகம்பேசுமிக்காலம்

மெய்யேபொய்யாங்கால மேலோர்கீழாங்காலம்
பொம்யேமெய்யாகப் பொருந்துமிதுகாலம்

வன்சமரிலோடினவர் வரிசைபெருங்காலம்
அஞ்சியேயாளடக்கி யரிவையர்மேலாங்காலம்

இன்பமுறுநூல்படித்த விகழ்ச்சியுருங்காலம்
பண்பில்லாநையாண்டிப் பாட்டைமெய்க்குந்துற்காலம்

இனிதானசர்க்குணர்க்கொன் றீயாக்கலிகாலம்
அனியாயக்காரருக்கு மடிக்குதவுந்தற்காலம்

பெண்டாட்டி வைதாலும் புருஷன்குறியாமற்
கொண்டாடிக்கொண்டிருக்குங் குலாமருக்கேயாங்காலம்

ஆனகலிகாலத் தடைவிதுவேயானாலு
மானபரனானவனும் வையகத்திலுண்டெனலாம்

இருப்பார்க்கொருகடனா மெய்தாதகாலமுமாம்
ஒருக்காலுமீயார்க் குதவுவாரிக்காலம்

ஆசாரந்தர்மங்க ளங்கசுத்திமூன் றுமில்லார்
வேசைவெள்ளாட்டிகளே மேல்வட்டமாங்காலம்

தேடியிடுவார்களுக்குத் தேவியர்கிட்டாக்காலம்
பேடிப்பயல்களுக்குப் பெண்டுகள்வாய்க்குங்காலம்

சுகமாய்க்குடிப்பிரந்த சுதாகரர்க்குமேன்மைகொஞ்சம்
விபசாரத்திற்பிறந்தோர் மேலவராமிக்காலம்

கொண்டபெண்ணைவிட்டுக் கொடிதானலவ்வாடி
மூண்டைகளைக்கொண்டலையு மூடர்மேலாங்காலம்

சொந்தமணவாளனையுந் தூஷணித்துச்சோரத்தில்
அந்தப்பகலூர்சுற்று மவிசாரிக்காங்காலம்

மேற்குலமுங்கீழ்குலமும் விபசாரத்தில்மிஞ்சி
வாகுபெறும்வேசையர்கள் வறுமைக்குள்ளாங்காலம்

பிள்ளைவயதில்மிகுத்தாற் பிதாவினதுசொற்கேளான்
தெள்ளியதோர்வித்தைகற்றால் சிஷன்குருவைத்தேடான்

பெண்டானவள்ளியவள் பேச்சில்மிகுந்தாக்கால்
கொண்டகணவனையுங் குறியாகவெண்ணாளாம்

பாறோர்கணோய்தீர்ந்தாற் பண்டிதரைத்தேடார்கள்
சீரானசெல்வம்வந்தாற் றெய்வமதைப்பேணார்கள்

தன்னுடையமாதா தமயன்மனையாட்டி
மன்னவர்கடன்றேவி மாமியாரானவரும்

தெய்வசிகரான தேசிகனார்தேவி
யைவரையுந்தாயென் றருளினார்முன்னூலோர்

பெற்றபெண்போலவே பேணிமருமகளை
வைத்தாதரித்து வருந்தியுபசரித்து
தந்தைதனக்கிளைய தாரமங்கைகேசி
பிந்திவருஞ்சித்திராங்கி பிள்ளைகட்குச்சத்திராதி
பின்தாரப்பிள்ளையென்று பேதகமில்லாமனக்
குந்திதனக்கொப்பான கோதைமுதல்மாதாவாம்

மநுநீதிகாதல்.

பிதா.

தன்னையேபெற்றவருஞ் சற்குருவுமன்னவரும்
மன்னுக்தமயனுடன் மாமன்வளர்த்தவரும
வித்தைவருவித்தோர் வெங்கலியைத்தீர்த்தவரும்
மற்றுமொருவாபத்து வரும்போதுகாத்தவரும்
ஒரொன்பதுபேரு முற்றபிதாவென்று
கூறுமனுநீதிக் கொள்கையிதுவேயாகும்
கல்விவருவித்துக் கடனொன்றுமில்லாமற்
செல்வமுடன்வைத்த திறவானோர்தந்தையுமாம்

மைந்தர்.

அற்பராம்நூறுபிள்ளை யானாலும்பெற்றுமென்ன
சற்புத்ரனொன்றானாற் றலைமுறையெல்லாம்விளங்கும்
தந்தைதாய்வாக்யந் தமயன்குருவாக்கியம்
சிந்தைதனிற்சத்தியமுந் தெய்வவிசுவாசமுடன்
இத்தகமையாருடையோ னினியதசரதன்றன்
புத்திரனுக்கொப்பான புத்திரனேபுத்திரனும்
எத்தனைதான்செல்வத் தியல்போடிருந்தாலும்
புத்திரனில்லாவாழ்வு போசனமுநஞ்சாகும்
தந்தைதாய்வாக்யமது தன்னைபரிபாலித்தோர்
நந்தாதசரதனும் ராஜகுமாரனென்பார்
பிதாவுடையவாக்கியம் பிசகாதுகாத்தவன்றான்
சுதாகரில்மிக்க சுதன்பரசுராமனென்பார்
ஆசான்றன்வாக்ய மனுவுந்தவறுதான்
வாசாலன்சத்யமுள்ள வாய்மையரிச்சந்திரனு
தமயனுரைதட்டாத சற்புத்திரரானோர்
தமையுமங்கேசீர்தூக்கிற் றருமனுக்குநேரிளையோர்
தந்தைபேர்தன்பேருந் தாரணியிலேவிளங்கித்
தந்தைதாய்சொல்மறுக்காத் தன்மையோன்புத்திரனும் ௬௬௰
தந்தைக்கிசைந்தமது தாரமேதன்றாய்ப்போல்
வந்தனைசெய்மைந்தர் மனுகுலத்துமைந்தரொப்பார்
நல்லார்பொல்லாரென் றிரண்டுவகையாயுலகுஞ்
சொல்லுவதைவிந்திலுற்ற சுதாலறிந்திடலாம

சோசியம்.

உற்பவித்தநாளும்பின் னென்பதுடனென்பதுவும்
வைப்போதும்வைக்கவொண்ணு வழிபோகலாகாது
வல்பிணியுந்தீருது மருந்துண்ணலாகாது
கல்யாணபெண்ணைமயிர் க்களைந்திடவுமாகாது
இல்லம்புகுத லினிதுண்ணலும்விதைக்க
நல்லறங்கள்செய்திடவு நற்பணிகள்நற்றாசு
தானுந்தரிக்கவிது சார்ந்தநாளாகுமென்று
மேநாட்கணித விதியாலுரைத்தனரே
திங்கள்முதநாளுமது சென்றகடைநாளுடனே
மங்கையர்கள்பூப்புநாள் வாசியமாவாசியிலும்
சென்மநாள்மூன்றிலுஞ் சேயிழையைபுணர்ந்தால்
தன்மமல்லவாழ்நாளுந் தன்குறையுநோயணுகும்
தலைக்கெண்ணைபோசனமுஞ் சவரமுடனித்திரையும்
நலத்தைகெடுக்குமந்த நற்கிழக்குதெற்கதுவும்
மற்றவிருதிசையு மாகாதுமத்தியமாம்
அந்தமழிவதல்லா லாயுள்விர்த்தியில்லையென்றார்

இலட்சுமியிருப்பிடம்.

மாயவன்றன்மார்பினிலும் மன்னரிடத்தினிலும்
தூயதொருவில்வந் துளவங்கடப்பமலர்
தாமரையின்மீதினிலுஞ் சாகரத்திற்கங்கையிலும்
சேமமுறுமியானை தேசிமுகத்தினிலும்
ஊதுகின்றசங்குமுட னுத்திராட்சஞ்சாமரத்தில்
கேதனத்திற்றேரினிலே கேட்டபோதன்னோர்பால்
சுத்தமுள்ளவீரரிடஞ் சுத்தமாகியமனையிற்
சத்தியஞ்சேர்வாக்குடையோர் தர்மபரிபாலனர்கள்
அழகுஞ்சுசிகரமு மமர்ந்தகுணப்பெண்ணிடத்தில்
வளமைதரும்பசுக்கள் வாழுமிடந்தனிலும்
மாகனம்போல்சுத்த மானவிடந்தனிலும்
மோகனகமாது குடியிருப்பாளெந்நாளும்

மூதேவியிருப்பிடம்.

சோரஸ்திரீயிடத்திற் சூதகப்பெண்ணிழலில்
பாரக்கிடாவிற் பல்விளக்காப்பேரிடத்தில்

ஞூளைப்புகையிற் சுடுகாடெரியுகையில்
காளையாங்காமுகர்பால் கழுதையிடத்தினிலும்

கள்ளிநிழலதிலுங் கைம்பெண்கடன்னிடத்திற்
கொள்ளிக்கரியுமியிற் கொட்டைநூற்பாரிடத்தில்

நீசர்நிழலில் நிட்டையில்லாரிடத்தில்
பேசுங்கடுஞ்சினத்தோர் பேடியிடந்தனிலும் ௪௯௰

சுத்தமில்லாமனையிற் சுராபானரிடமிரவில்
வெற்றிபெறும்வேல் விரைவினிழல்தனிலும்

என்றுஞ்சுசிகரங்க ளில்லார்விதவைகளை
மொன்றியணைவோர்பா லுதயந்துயில்வோர்பால்

மூதேவியாளுவித மோடிருசடியிருப்பாள்
மீதூணருந்துவர்பால் மேன்மைசற்றுமில்லாத

பாங்காகநாளும் பகர்புணர்ச்சிசெய்பவருந்
தாங்காதிடக்கையாற் றம்பூலந்தின்பவரும்

போசனங்கள்செய்கின்ற போதிற்சிரசினிலே
தூசுபுனைந்துண்ட துன்மார்க்கரானவரும்

காலையிலுமாலையிலுங் கண்துயில்வார்தன்னுடனே
நாலுபேரானவர்பா லட்சுமியும்நல்லாளே

பகை.

பாரம்பெரியகத்தி பஞ்சுதனக்கேநானும்
சூரியனுஞ்சந்திரனுந் துட்டரவிநால்மறையும்

சிற்றெறும்பால்யானை திகைக்குமதுபோல
அற்பரால்மேலோர்க் கவதிகளும்வந்தெய்தும்

தந்தைதாய்சொற்கேளார் தடுப்பார்கொடுப்போரை
அந்தக்கொடியோரு மட்டமத்திலேசனியாம்

சபையிற்பிரசங்கந் தன்னிற்பழுதுரைப்போர்
அபயமிட்டுப்பேச்சில்மிச்ச மானதொருபெண்டூரும்

தாமாய்விரோதியுடன் றுணிவர்கள்மூவருந்தான்
சேமத்திலேவந்த செவ்வாய்க்கிணையெனலாம்

தன்னையிஞ்சுமடிமை சந்திராஷ்டப்பங்குக்காய்
தன்னைச்சபையேற்றுந் தம்பிசென்மச்சூரியனும்

சகோதரற்குவஞ்சனைசெய் தமயனுமென்பவருன்
மகாபாவிமூன்று மிடத்துவியாழமதாம்

பார்த்திபர்கள்மெச்சவென்று பழுதுசொல்லிக்கெடுப்பார்
ஏற்றமிடும்பொல்லாத இராகுவுடன்கேதுவுமாய்

சாலக்கடன்பட்ட தந்தையருமார்க்கமனு
கூலமாயுட்பட்டுக் கொண்டுதிரிதாயாரும்

வித்தையில்லாப்பிள்ளையுடன் வேசையாய்ப்பெண்டாட்டி
சத்துருவாநால்வரென்று சாற்றினார்முந்நூலோர்

வேங்கைபதுங்குவதும் வேழம்பின்வாங்குவதும்
பாங்காய்பகையுறவும் பாம்புசாய்ந்தாடுவதும்

நல்லோர்பெரியோர்க ணயந்துவணங்குவது
மெல்லவிடச்சிரிப்பும் விழிமகிழுமின்னொளியும்

மிக்கானவில்வளைவும் வேழமுறங்குவது
உக்கிரதளஞ்சமரி லொன்னலார்க்கொதுக்கும்

இத்தகையாமீறைந்து வெளிதாய்நினைக்கவொண்ணு
மத்திபமாமுயிர்க்கு வாதைகளுமுண்டாகும்

சொற்குற்றம்பாராட்டித் தொழுவழக்கைச்செய்பவர்போல்
பற்காட்டிசீவனங்கள் பண்ணித்திரிவதுதான்

வலிதானவாடரவின் வஞ்சப்படத்தினுள்ளே
எழிலாகவாழ்ந்தாரென் றியம்பினார்முந்நூலோர்

பண்பாய்க்க்டுவுறவு பண்ணவந்தனாயமிது
பின்பவரையும்பிரிந்தார் பிணக்காம்பகைநேரும்

அங்கபங்கமானாலு மகூசியங்களானாலும்
தங்கள்குலத்தோருந் தாழ்வுற்றிருந்தாலும்

நிந்தைகள்சொல்லி நெகிழ்ந்துரைக்கலாகாது
எந்தக்குலமு மிழிவில்லாதில்லையில்லை

துன்பம்பழிபகையுந் தொடரும்பழிபிழைகள்
பின்பவர்க்குமெய்தும் பெருமைசற்றுமில்லாது

பகை வெறுப்பு.

நேர்ந்தவினைவலியும் நேர்வார்கடன்வலியும்
சேர்ந்துவலியுஞ் சீர்தூக்கிச்செய்வதுமாம்

கூடாதகாலமடைக் கொக்கதுபோலேயிருப்போம்
கூடுமந்தக்காலமடைக் கொக்குபோல்வெற்றிகொள்வாம்

நட்பவெறும்பொலாங்கூடி நோக்காமலேயேற
ஒப்பில்கருங்குழிந்த வுலவைபலவெல்லுதலாம்

மெள்ளமெள்ளப்பாய்ந்த நீர்முகக்கடுமலையின்
கல்லைக்கரைக்குங் கதைபோற்பகையறுத்தல்

காலமதுவறிந்து காக்கைவெல்லுங்கூகைதனை
காலமதுதப்பினால் காக்கைதனைக்கூகைவெல்லும்

சிலநாளாயானையொரு தேங்காயினோடடக்கி
பலிதமுள்ளவேலைகண்டு பாகனையேவென்றதுவாம்

பண்பாகக்காலமது பார்த்துபகைசெலுத்தும்
பண்பிதுவாமென்று பகர்ந்தாரேமுன்னோர்கள்

உற்றபகைவரென்று லுள்ளாக்கிக்காரியங்கள்
பெற்றபிறகுமதை பேதமதைக்காட்டுவதாம்

காலத்தின்சீலங் கண்டறிந்துகொள்ளாதார்
கோலமழிந்து குரங்காவார்தப்பாது

சேரிடம்.

சந்தனவிருட்சமதைச் சார்ந்தமரமவ்வாசம்
அந்தமகமேரணைந்த வக்காகமன்னிறமாம்

பாலில்கலந்தநீர் படிகமணிக்குள்வடமும்
சாலமரகதக்கற் சால்கைபட்டதிறமுன்றும்

தன்னிறங்களைக்கொடுக்குந் தன்மைபோல்நல்லோரை
நன்னயமாய்ச்சேர்ந்தோர்க்கு நற்குணமேயுண்டாகும்

நல்லாரைக்காண்பதுவு நல்லார்சொற்கேட்பதுவும்
நல்லார்குணமுரைத்தா னன்மைகண்டாநற்றுளம்

ஆசாரமன்பு மறிவடக்கமுள்ளோரைத்
தேசத்திற்கண்டு சேர்ந்தார்பெருமைவரும்

கதிரோனுதிக்கையிலே கண்டபெருஞ்சாய்கை
மதியமதிலேகுமது வாறுசிறியோரிணக்கம்

மதியந்திரும்பினபின் வாதிக்குஞ்சாய்கையைப்போல்
சதிராய்ப்பெரியோரைச் சார்ந்தாலேநன்மைதரும்

கற்றபெரியோருறவு கரும்புநுனியிலிருந்
துற்றதலைவேர்வரைக்கு முண்டருசிபோலாகும்

சிறியோருடனுறவு தின்கரும்படியிலிருந்
துதியநுனிவரைக்கு முண்டருசிபோலாகும்

செல்லாவிடம்.

கடலோடுங்கப்பலது கரையிலேயோடாது
புடவியிலேயோடுந்தேர் புனலிலேயோடாது

தண்ணீரில்முதலையதைத் தத்திவெல்லமாட்டாது
நண்ணுபுலிகாடன்றி நாடுற்றூர்கேடடையும்

செல்லுமிடமிவ்வாறு திறஞ்செலுத்தவேண்டுமன்றிச்
செல்லாவிடந்தனிலே திறஞ்செலுத்தக்கூடாதே

யோகம்.

மன்னர்மெச்சிக்கும் வரிசையதிகாரம்
பன்னுஞ்சாம்பிராச்சியமும் பட்டாபிஷேகமென்பார்

நல்லகுணமாகுமுன்னால் நாடிவலியவந்து
புல்கிடிலேயோகம் புத்தமிர்தசித்தமுமாம்

மண்ணிற்புதைத்தபொருள் வாதமுரைக்காசையுற்று
நண்ணுவர்க்கெய்தாம னண்ணார்கட்கெய்துவதும்

மிஞ்சும்பயிர்விதைத்து விளைவுகுன்றிப்போவதுவுங்
கொஞ்சம்பயிரிடுவார் கூடிவந்துதாழ்வதுவுங்

கப்பல்வியாபாரங் கணக்குரைத்துப்போவதுவும்
சொற்பமாய்வாணிபஞ்செய் தோர்களுக்குகூடுவதும்

காணுமற்காணுமற் காவலர்கள்கேள்வியினால்
தோணுதலாய்வலியத் தொழில்கொடுத்துவாழுவதும்

மேனாளிற்றந்தைதாய் விட்டகுறையாகுமென்று
தானுமுன்னாள்செய்திருந்த கர்மமாவதென்னும்

அந்நாள்நற்பூவெடுத்து அர்ச்சனைகள்செய்ததென்றும்
இந்நாட்பெரியோருக் கீய்ந்துவரப்பெற்றதென்றும்

லட்சுமிகடாட்சமிந்த நான்குவகையோர்க்குமென்று
உச்சிதமாய்முன்னோ றுரைத்தாருலகோர்க்கு

திருமடந்தையேகில் சிறப்புங்கனமுமுண்டு
பொருளுந்துரும்பாகும் பொல்லாருநல்லோராம்

செல்லாதவார்த்தைசெல்லுஞ் செய்யுமரியாதையுண்டாம்
எல்லாருமேபுகழ்வா ரெதிராளியுமுறவாம்

கீழோருமேலோராய்க் கிளையுமிகவிர்த்தியுண்டாம்
தாழப்பெறுங்காற்றுத் தண்ணீர்போற்குடித்தும்

மனஉலக்கம்.

வீரப்புலியுயிரை விட்டாலேதோல்கொடுக்கும்
சூரனுயிர்போமளவுந் தோர்வையென்றுபின்வாங்கான்

உத்தமியேயெந்நாளு முயிர்க்குலையமில்லாமல்
சற்றாகிலும்பிறர்க்குத் தன்னியத்தைத்தான்கொடுக்காள்

ஏற்கைபோய்ச்சாலவுந்தா னென்னதுன்பமுற்றாலும்
ஊக்கமதுகைவிட்டா னுயிர்க்குலயம்வந்தெய்தும்

உள்ளஞ்சிதராம லொன்றினையேகைப்பிடித்தால்
தெள்ளிமருளுஞ் சித்திமுத்திரண்டுமெய்தும்

பல்லும்பிணைக்கவொரு பலனேதுமெய்தாது
அலைவாய்த்துரும்பதுபோ லலைந்துகெடுஞ்சித்தியில்லை

ஐம்புலனையும்உரியோ ரடக்குவதுவேயருமை
செம்பொன்னெல்லாந்தேடித் தினங்கொடுப்பதேயருமை

தெண்டிக்கவல்லவ னெனப்பொருப்பதேயருமை
கொண்டகணவற்கிசைந்த கொம்பனையுமேயருமை

தேசமொன்றில்பேதைமன நிற்பதுவுமேயருமை
தேசத்திவ்வைவரையுந் தெய்வபிறப்பெனலாம்

அளவிலாமை.

பெருங்கடலாழம் புருஷயோகஞ்சூது
மங்கையர்கடன்மனமும் வஸ்துவின்றனிமணமும்

வானளவுமாற்று மணலுமழைத்துளியும்
வானிலுறுகணமு மண்ணுண்டராசரையும்

உற்றபெரியோர்க ளுள்ளக்கருத்தளவுங்
கற்றோர்கருத்துங் காமன்கணைபகலும்

மானிடர்கள்சென்ம மனுத்தொகையுமாமனையு
மானபருவதங்க ளனைத்துமதினிறையும்

பார்க்குள்ளேயிந்தப் பதினாறுவல்லபத்தை
யார்க்குமளவிடவு மாகாதுகாவணரே

இறந்தார்பிறந்தார்க ளிவ்வளவாமென்றாலுந்
துறந்தார்பெருமைகளைத் துகையறிந்துசொல்லவொண்ணா

ஆயுள்நிதானங்க ளாறிரண்டிலேகிரகந்
தூயநிகரானநிலை சொல்லயெவராலுமில்லை

சூரியன்முன்னிற்கலாஞ் சுடுமணலில்நிற்கவொண்ணா
ஆறணியுமீசர்முன்னே யஞ்சாமற்பேசிடினும்

தேசமதில்முக்யஞ் சிவனடியார்முன்புநின்று
பேசவரிதென்று பெரியோருரைத்திடுவார்

வாரியினீராழம் வானளவுமாமலையும்
ஆறின்கறைமணலு மாகாசத்தேயுதவும்

அன்பாமிவையந்து வளவுகண்டுசொன்னாலுங்
கொம்பனையார்நெஞ்சக் குறிப்பறியவொண்ணாதே

வெள்ளம்பறவைகளும் விலங்குடனேவேசையர்கள்
உள்ளமிவைநான்கு மொருவழியாய்நில்லாதே

உதவி,

வாவிநீரம்பலத்தில் வைத்தமரநிழலுந்
தாவுமணலூற்றுத் தண்ணீரின்பந்தலுடன்

பாங்கானசந்நிதியில் பழுத்தமரமானதுவுந்
தாங்கும்விபசாரி தனமும்நிலவினொளி

பார்க்குள்விவேகியர்கள் பாக்கியமிவ்வொன்பதுவும்
ஆர்க்குமுபகார மல்லாதவிணலதே

நல்லோர்தேடும்பொருள்கள் நாவலர்க்கும்வேதியர்க்கும்
வல்லகுருவானவர்க்கும் மாதாபிதாவினற்கும்

புத்திரர்கடன்றனக்கும் போற்றுமித்தேவதைக்கும்
உற்றசகோதரற்கு முண்டென்றுநம்பினர்க்கும்

தர்மமேசெய்பவர்க்குஞ் சார்ந்தவறிஞருக்கும்
இம்மாத்திரம்பேர்க்கு மெய்துமிவர்பொருளே

இல்லந்தனக்குத்தன் னேந்திழையாளே துணையாம்
நல்லதேகந்தனக்கு நற்றுணைவரே துணையாம்

தேசாந்திரனுக்குச் சீர்துணையாங்கற்றகல்வி
மாசற்றிகபரத்தில் வருந்துணைதான்செய்ததர்மம்

வர்த்தகர்பால்வைத்தபொருள் மன்னவர்கடன்பழக்கம்
உற்றவிவேகிக் குபசாரஞ்செய்ததுவும்

பருவத்தில்பெற்றபிள்ளை பக்குவத்திற்கற்றவித்தை
தருணத்திலீரைந்துந் தானுதவுந்தப்பாதே

என்னபகையானுலு மிடர்க்குதவிசெய்தல்நலம்
பின்னக்கவிசொலினு மேன்மைசெய்வரேபெரியோர் ௫௫

உதவாமை.

நாய்பால்சொரிந்துமென்ன நாணல்மிகப்பூர்த்துமென்ன
பேய்பொன்னைக்காத்துமென்ன பேடிகையிலாயுதமேன்

எட்டிப்பழுத்துமென்ன ஈண்டுகழைத்துமென்ன
பட்டுபணிசித்திரத்திற் பண்ணியிருந்துமென்ன

சற்குணமில்லாப்பெண் தங்கநிறமாகியென்ன
மிக்கசபைக்கோழை மிகுகல்விகற்றுமென்ன

ஆட்டின்கழுத்தி லதரதுவுநீண்டென்ன
காட்டினில்தெரித்தென்ன கானலிநீர்கண்டுமென்ன
வேசைக்குப்பொன்கொடுத்தென் வீணருக்குநன்றிசெய்தென்
மாசுடையவற்பருக்கு வந்தென்னதிகாரம்
காட்டுக்காடிமயிர கறுத்தநிறமாகி
நீட்டியிருந்தாலுமென்ன நெடுகக்குறையிலென்ன
இத்தனையாய்ச்சொன்னவிரு தெண்ணிரண்டுமீயாத
லுத்தர்கள்தம்வாழ்வுக்கு வொத்திருக்குந்தப்பாதே
தேகியென்போர்க்கீயாத தேடாதவற்குபொருள்
ஆகிவந்தாலுமென்ன அழிந்துபோனாலுமென்ன
பேடியழகுகண்டு பெண்கள்மகிழுவதும்
நீடுவஞ்சர்சொல்லை நிசமென்றிருப்பதுவும்
கானல்கண்டேயோடுங் கலைமானுஞ்சாலவுயிர்ப்
பாயிலவுகாத்திருந்த பச்சைக்கிளியதுவும்
தேனருந்தத்தாமரைமலர் சென்றசுரும்பினமும்
தானுய்ந்ததேன்கண்டு சப்பாணிமெய்ப்பதுவும்
புல்லர்களின்வாழ்வுகண்டு புகழ்பாடிப்போம்புலவர்
வல்லமைக்கொப்பென்று மனுநூலுரைத்திடுமே
கல்லாமலேட்டினிலே கண்டெழுதிவைத்தவித்தை
உல்லாசவேசையர்க ளுறவுசதமென்றிருந்தும்
மறுதேசம்போனபிள்ளை வஞ்சருடனேநேசம்
வருமென்றேயன்னியர்பால் வைத்தபொருள்பலதும்
தன்னைப்பெறுதவொரு தந்தைதாயானவரும்
பின்னுடன்பிறவாப் பின்னவர்கள்முன்னவர்க்ள்
பின்னுடன்பிறவாப் பின்னவர்கள்முன்னவர்கள்
பேறுகத்தம்வயிற்றிற் பெற்றுவளர்க்காதபிள்ளை
ஊருருடையசெல்வ முள்ளன்பிலாதபெண்டீர்
சத்தியமாயீராறுந் தருணதருணமென்று
உற்றசமையத்துக் குதவாதுகண்டீரே
ஆற்றிற்கரைத்தபுளி யனலிலேபோட்டவெண்ணெய்
காற்றிற்பரந்தபஞ்சு காட்டிலெரித்தநிலா
[illegible] குபெண்பாலும்
[illegible] பாய்ந்தடைக்கப்பலுந்தான்
சுட்டமண்ணினிலே தெளித்திட்டபன்னீரும்

இட்டமுடன்விழலுக் கிறைத்ததொருநந்நீரும்
வீணருக்குச்செய்தநன்றி வேசைக்களித்தபொருள்
காணுமிவைபத்துங் கைகூடாக்காரியமாம்
சற்பாத்திரமறிந்து தானஞ்செய்யாத்தருமம்
உப்புக்கால்தனிலு முவர்நிலத்திற்பெய்தமழை
பாம்பின்வாய்த்தேரை பரத்தைக்களித்தபொருள்
மேன்பாடுபெற்றபுவி வேந்தரிடஞ்சேர்த்தபொருள்
தானமாயாவருக்குந் தாரைவார்த்துக்கொடுத்துப்
போனபொருள்நமன்கை புகுந்ததொருமன்னுயிரும்
ஆனைவாயின்கரும்பு மணைகடந்துபோனவெள்ளம்
வானிலத்திற்கொள்ளைபற்றி வாதையிலும்போனமுதல்
வையகத்தில்வொன்பதுவும் வாராதுவந்தாலும்
அய்யோருலுத்த னரைக்காசுமீயாரும்
கவரிமான்மயிருங் கற்புடையாள்ஸ்தன்னியமும்
அவையாதவேங்கையின்றே லதிசூரன்கைவேலும்
ஆனாலும்லோபிபொரு ளைந்தும்வரவுயிர்கள்
போனாலேயன்றியொரு போதினுமேகிட்டாதே
கண்ணுக்கழகெட்டிக் கனிதாழைபின்கனியும்
வன்னமுருக்கின் மலரிவையாலேதுபயன்
தாழைமடலேபெரிது சன்னமலர்மடலாம்
தாழைமலர்வெய்யோன் சாய்கைபட்டால்வாசம்போம்
கன்னமகிழமலர் சருகாககாய்ந்தாலும்
வின்னமில்லாத்தன்மணமும் விட்டகன்றுபோகாது
ஆழியில்நீரதிக மள்ளியுண்ணலாகாது
ஆழியருகூற்றுவரு மன்னீருநன்னீராம்
இங்கிவற்றையொப்பாக ஈகைகற்றுமில்லாத
அங்கம்பெரிதா யழகாயிருந்துமென்ன
தேசமதுவில்லாவிடினுஞ் சிறியவுருவானாலும்
கைப்பொருளற்றால்வேசி கடுகளவுநட்புமில்லை
மெய்ப்பாகவெண்ணெயற்றால் விளக்கொளிவுசற்றுமில்லை

நற்பிறப்புத்தமர்.

பாவபுண்ணியமறிவார் பலபொருளுமிச்சியார்
பூவைபலனேக்கார் புராணநெறியுணர்வார்

மாதவங்கள்செய்தார் வன்கொலைகண்டஞ்சுவார்
சூதாடாராயரது துன்பத்துக்குள்ளாகார்
உய்யவேயிவ்வா ருடையவர்கள்சற்குணராம்
தெய்வத்தின்றத்துவமாய்ச் செப்பினார்முன்னோர்கள்
மாதாபிதாகுரு வானவரத்தெய்வத்தை
மீகாய்பணியும் விசுவாசமுள்ளவர்கள்
தன்தாரமன்றிமறு தாரந்தனைநோக்கார்
புந்திமகிழ்ந்துதிதி பூசைபுரிவோரும்
சத்தியமொழிபூர்வ தர்மபரிபாலனர்கள்
சுத்தமுறுநந்தவனச் சோலையதுவைத்தவரும்
பார்க்குட்சகாயமதாய்ப் பாட்டைகளைச்சீர்திருத்தி
மார்க்கந்தண்ணீர்ப்பந்தல் மண்டபங்கூவம்வாரு
செய்யுமகாபுண்ணியத் தேகராதுவுத்தமர்க்கு
எய்யாமலைபோலே யாதுதுன்பம்வந்தாலும்
வெய்யில்தனைக்கண்டு விலகும்பனியெனப்போம்
கைலாசநற்பதமெக் காலுமிவர்க்குண்டாகும்
தாமரையின்மாமலருஞ் சவ்வாதுபுனுகுடனே
பூமருவுதேனும் புணரியுறுசிப்பிமுத்தும்
பொன்னுங்கவரிமயிர் புகழ்சேர்கோரோசனையும்
நன்னியஞ்சேராவின்பால் நற்றாசுபட்டதுவும்
ஈதுபத்தானவகை யெங்கேபிறந்தாலு
மேதைபற்றார்போல்நல்லோ ரெக்குலத்தோராயிலென்ன
உப்புங்கர்ப்பூரமது வொன்றுபோலேயிருந்தும்
உப்புக்குங்கற்பூர முயர்ந்தவிலையாகுமன்றோ
எல்லோருக்கும்ரூப மொன்றாயிருந்தாலும்
நல்லோர்தமக்குறிய ராவரோபாவிகள்தான்
பங்கமுற்றமூடர் படபடத்துப்பேசுவது
வெங்கலத்தினோசை விதமாகுங்கண்டீரே
நல்லதங்கத்தி னுதம்போற்சீருக
மெல்லமிருதுச்சொல் விளம்புவாருத்தமர்கள்
பன்றியைக்கண்டால்யானை பாதைவிலகுதல்போல்
நன்றியற்றபேதையர்க ளானோர்வரவுகண்டால்
அந்தவழிவிலகி யப்பாலேபோகுவது
சிந்தைதெளிமேலோர்கள் செய்கையென்றுசொல்வதுவாம்

நன்னயஞ்சேர்பொன்னும் நற்பாலுஞ்சந்தனமுங்
கன்னல்தனையுமென்ன கண்டனைகள்செய்தாலும்

முக்குணமேகாட்டு முறையோர்பெரியோர்க்குத்
தங்கியிடர்வந்தாலுஞ் சற்குணம்போகாதே

சிவயோகியானவர்க்குச் சென்மமொருக்காலுமில்லை
தவஞ்சேர்ரசவாதி தனக்கணுவும்பஞ்சமில்லை

காலைதுயிலொழிதல் காணுமலேபுணர்ச்சி
மாலைமுழுகி மனைதனிலேசெல்வதுவும்

உற்றாரோடுண்ண லுயிரோம்பலிவ்வாறும்
இத்தலத்தில்வாழ்வோர்க் கியல்பென்றுரைத்தனரே

உற்றபசுவானதவு மோர்கன்றையேயீனும்
பத்தானகுட்டிகளைப் பயிலும்பெரும்புலிதான்

கோரமதுசெய்வதற்குக் கொம்பிருந்துமேபசுதான்
வீரமில்லாசற்குணத்தால் மேன்மைமிகவுண்டாகி

வங்கிஷமும்விர்த்தியாம் வன்புலியின்கோரத்தால்
பங்கமுறுகுட்டியது பத்தீன்றும்விர்த்தியில்லை

நன்மைதுன்மைரண்டுமிக்க நாட்டினுக்குதாட்சியதாய்
உண்மையிதுவென் றுரைத்தார்மனுநூலோர்

தெய்வதரிசனங்கள் தெய்வவிசுவாசம்
பொய்யாததானதவம் புத்ரர்களையோடுணவு

பெரியோர்கள்சேர்வைகுலப் பெண்ணுளனுபோகம்
குறையாதசெல்வமுநோய் கொள்ளாததேகவிர்த்தி

தன்மையுடனீன்ற தாய்தந்தைசெய்தவமு
முன்னோர்செய்புண்ணியத்தின் முக்கியமென்றேயுரைத்தார்

வித்வான்களாவரு மெய்ஞ்ஞானமுற்றவரும்
வெற்புபுலிநகமு மேன்மையுள்ளபூனைமதம்

காராணைதங்கள் கவரிமான்றன்மயிருஞ்
சீரானவாறுமெங்கே சென்றாலுமேன்மையுண்டாம்

நாயானதுசினந்து நமைகடித்தால்நம்முடைய
வாயாலதைக்கடிக்கும் வாறுண்டோவையகத்தில்

அறிவில்லாமூட ரனேகமாய்வைதாலும்
பெரியோர்கள்வாய்திறந்து பேசாரொருக்காலும்

சற்குணத்தினாலே தர்மமதுவந்தெய்தும்
துக்கம்வராதவர்கள் தொடங்கினதுங்கைவசமாம்

தாரித்திரமுமில்லை தக்கோர்பயமுமில்லை
பாரிற்புகழ்விளங்கும் பாகதியுமுண்டாகும்

நற்பிறவி துற்சனர்.

எண்ணுமல்யாதொன்று மியார்க்குமிடர்செய்வார்
எண்ணுமற்கொலைகளவுக் கிறைச்சிமுதலான துண்பார்

பொய்யுரைக்கவஞ்சார் போசனமுஞ்சாலவுண்பார்
மெய்யிற்பசியில்லா ரிராட்சதர்கணமாகும்

அஞ்சார்தனிவழக்கு யாவரையுமேமருட்டி
வஞ்சனையில்வெல்வார் வலியாரையானாலும்

ராப்பகலுமாறாமல் நாரியர்தமைப்புணர்வார்
சாப்பாட்டொழுக்கமுடன் தம்முடம்புசுத்தியில்லார்

மாதலத்திலிருந்த வன்னெஞ்சுடையவர்தான்
பூதகணம்பேய்க்கும் புறம்பாகுமென்றனரே

கொம்புளதுக்கைந்துமுழங் குதிரைக்குபத்துமுழம்
அன்பானயானைக்கோ ராயிரமுழத்தினப்பால்

வண்டிகண்டாலைந்துமுழ மப்பாலாந்துற்சனரை
கண்டவுடன்காதவழிக் கப்பாலேயோடநலம்

பாம்புமுதலானதற்குப் பல்லதனிலேவிஷமாம்
வீம்பானதேள்தனக்கு விஷமதுவும்வாலினிலே சுநடய

துற்சனரானவர்க்குத் தேகமெல்லாம்விஷங்கள்
மிச்சமென்றுசொல்லி விதித்தார்மனுநூலோர்

வேம்பிற்கசப்பும் மேவாமருக்கொழுந்திற்
சோம்பாமணமிரண்டுந் தோன்றும்போதுண்டான

வாறுபோல்துற்குணமும்வாய்ந்தபுகழ்சற்குணமும்
மீளாப்பிறப்பிலனாதியிடை யிலொன்றும்வாராது

நாய்க்குநல்லபோசனமும் நற்பணியுந்தான்பூட்டி
ஏற்கவேதண்டிகையி லேற்றிவைத்தபோதாலும்

கண்ணில்மறுநாயைக் கண்டவுடனேகுலைக்கும்
வண்ணம்போல்துற்சனற்கு வாராதுநற்குணந்தான்

எல்லாருந்தூஷணிக்க வெல்லாருங்கோளுரைப்போன்
பொல்லாதகாற்றிற் பிடித்தெரியுமக்கினியாம்

பொல்லாரைக்காண்பதுவும் பொல்லாற்சொல்கேட்பதுவும்
பொல்லோர்குணமுறைத்த போதிலேநீதாகும்

தர்மந்தனைநினையார் தக்கபழிக்கஞ்சார்
கர்மியவர்வாழ்வுவெகு காலநிற்கமாட்டாது

தலங்கள்தனைத்துதியார் தர்மகதைகேளார்
குலங்குரதியாடார் சுவடிவாசித்தறியார்

வாசமிகுகீர்த்தியுள்ள மானிடசென்மங்களிலே
நீசப்பிறப்பிவாரை நேத்திரத்திற்பார்க்கவொண்ணு

நிறை.

தங்கமுருக்கிடினுந் தன்னொளிவுமங்காது
சங்கதனைச்சுட்டாலுந் தன்னிறமும்போகாது

சந்தனத்தையுரைத்துச் சலந்திற்கரைத்திடினும்
விந்தையுறுமணமும் விட்டகன்றுபோகாது

சாணையிலேமாணிக்கந் தகர்த்துமிகத்தேய்த்தாலும்
காணியொளிவுமொருக் காலுமனுமங்காது

பால்முறியக்காய்ந்தாலும் பண்சுவைகுன்றாது
ஞாலமிதையிவ்வாறு நல்லோர்பெரியோர்க்கும்

ஆகாரமின்றியென்ன வாபத்துவந்தாலும்
நீதிவழுவார்கள் நிறையுந்தவறாரே

ஊரார்பொருள்மேலொருபோதுமாசைவையார்
பூராயமான புருஷோத்தமநிகாரம்

தன்னுடையசெய்கையைப்போல் தானெவரையும்பார்ப்பார்
இன்னமொன்றுஞ்சொல்லாதார் தெய்வப்புருஷரென்பார்

சார்ந்தவரைக்காப்பார்கள் தன்புருஷன்மேருவாம்
ஏய்ந்தமனமறிந்து ஈவோர்புருஷரத்னம்

வாராவறுமைமிக வந்தாலுமற்பர்களைப்
பாராரோசேரார் பண்பாம்புருஷசிங்கம்

தாய்தந்தையானாலுஞ் சமன்செய்தகோலதுபோல்
ஞாயமுரைப்போர்புருஷ நாயகமென்றேயுரைப்பார் ௯௫

ஈகை.

ஆறுவற்றிலூற்றாறும் அண்டம்விளக்கிவருஞ்
சூரியனோராகுவந்து சூழ்ந்திடினும்வெய்யிலுண்டாம்

நல்லமதிதேய்ந்தாலும் நல்வெளிச்சங்கொஞ்சமுண்டு
கொல்லைபாழானாலுங் குருவிக்கிறையுமுண்டு

இவ்வகைபோலீவோருக் கேதிடர்கள்வந்தாலும்
எவ்வளவுமீதல்லா லில்லையென்றுசொல்லாரும்

எடுக்கெடுக்கவூறு மிசைந்தமணற்கேணியைப்போல்
கொடுக்கக்கொடுக்கவல்லோகூடும்பெருஞ்செல்வம்

வந்தவிருந்துக்களித்து வரும்விருந்துபார்த்திருக்கும்
சிந்தையுடையோர்கள் தேவரிலுமேயதிகம்

தாரித்திரத்தார் றயவில்லாதம்பிடத்திற்
கூறினாலேதுங் கொடுக்காரிகழ்ச்சிசெய்வார்

ஈயுமுதாரனைத்தா னெப்போதும்வேணுமென்று
வாய்திறக்கவேண்டா மனதறிந்தேயீவானும்

ஈகைக்கிடையூறு.

தேனிடத்திலீயுமுண்டு ஜலத்தில்முதலையுண்டு
மானிலத்தின்விடுகளி லண்டவிடாநாய்களுண்டு

சந்தனவிருட்சத்தி னடியிலேசர்ப்பமுண்டு
கெந்தமிகுதாழம்பூ கிள்ளவென்றால்முள்ளுமுண்டு

கொடுக்குந்தியாகிகள்போல் கொடாமலிடையூறுசொல்லி
தடுக்குங்குலாமரெங்கே தானுமுண்டேகண்டீரே ௬௬ய்

குற்றமுரைத்துக் கொடுப்போர்தமைக்கொடுப்பார்
சுற்றமழிந்திடையுஞ் சோறுமஞ்சாகிவிடும்

சி னே க ம்.

மதியிலுருமுயலு மதிவளர்ந்தால்வளருஞ்
சதிராகத்தேயுநாள் தானுமதுதேய்ந்திடுமாம்

வாவிதன்னிற்கொடிகளும் மந்நீர்போற்றாழ்ந்துயரும்
மாவிதஞ்சேர்புற்பூடும் வளருமதிமேலடியும்

சேரும்பெரியோர் சினேகமிவ்வாறுகுமென்று
கூறுமனுநீதிக் கொள்கையிதுவேயாகும்

ச ரீ ர சு க ம்.

ஏற்றபுதன்சனியி லெண்ணெயிட்டேமுழுகி
காற்றுப்பனிவெய்யில்காயார்கள்மெய்வருந்தார்

ஓயாவழிநடக்கா ருண்டுபலகால்விருந்தார்
காயாவதுகிழங்கு கனியுமிகத்தின்னார்கள்

தன்வயதின்மேலான தையலுடனேசேரார்
உண்மைப்பசியன்றி யுணவுசற்றுமுண்ணார்கள்

மலநீரடக்கார்கள் மடப்பளியிலேயிருக்கார்
நலமாய்ப்பழங்கறியை நாடார்பலநாளும்

காய்ச்சுபால்நெய்மோரைக் காலமுந்தான்சேர்ப்பார்கள்
ஏச்சில்லாவழுக்கை யிளநீர்மிகுந்துண்பார்

ஆறுதிங்கட்கொருவிசைதா னனவிரோசனமுன்
நாரியரைமாதமொன்றிற் கிரண்டுவிசைபுல்குவரும்

உண்டபின்புலாவி யுக்கம்வருந்துவதும்
ரெண்டுபத்துரெண்டுமிந்த நெறிநிலையுள்ளார்தமக்கு

ஏர்க்குமுடல்தனிலே யேப்பிணியும்வாராது
தீர்க்காயிசுண்டாகும் செய்மென்றுசெப்பினரே

மாறுபாடில்லாமல் வயிறறிந்துண்பவர்க்கு
நூறுவரையுடலி நோயணுகமாட்டாதே

நோயணுகல்.

கல்லால்மயிரானுங் கடுகிநடையாலும்
நெல்லாலுமியாலு நித்திரையில்லாதாலும்

ஒழியாவிசாரத்தா லுண்டபின்புழுழ்கையினால்
கழியுமலசலங்கள் கக்கிஷமாய்விழ்கையினால்

பின்னுமடக்குவதால் பெருத்தசுமைசுமத்தல்
மின்னாருடன்புணர்ச்சி மிகவும்விரும்புவதால்

வெய்யவனம்வேலையினால் வேர்வைபனிக்காற்றினால்
வெய்யவிளவெய்யல் விருப்பல்கனியுணர்வு

ஏர்க்குங்கிழங்குசரு கிலைவிரும்பல்கனியுணர்வு
பார்க்குள்ளியாதிவரும் பாண்டமிதுவென்றுரைப்பார்

காலையிளம்வெய்யிற் காய்வோர்பிணைமனிதன்
மேலேவரும்புகைதன் மேலேபடுவோர்கள்

தன்வயதுக்கேமூத்த தையல்தனைப்புணர்வோர்
தன்மையுடனிரவில் தயிர்வார்த்தேயுண்பவர்கள்

நால்வரிடந்தனிலே லட்சுமியுமில்லாளாம்
மேலும்வராயுள் விழலாகப்போகுமென்றார்

இறந்துமிறவாதவர்.

பார்க்குள்விளங்கப் பலதர்மஞ்செய்தவர்கள்
மார்க்கமிகுகற்புடைய மாதைமணஞ்செய்தவர்கள்

தேவாலயமுதலாய்த் திருமடங்கள்கட்டினவர்
பூவானதுவிளங்கப் புனலாறுண்டாக்கினவர்

வரியோரிருக்க மனைகட்டிவைத்தவர்கள்
தரையாண்டநீதியன்னர் சற்புத்ரரைப்பயின்றோர்

காவியஞ்செய்கவிஞர் கவிமாலைசூட்டினவர்
பூவுலகிலோயாமல் பொருள்கொடுத்தமாந்தர்களும்

சீரானகோபுரங்கள் செய்துமுடித்தவர்கள்
சூராதிசூரர் துலங்குபதின்மூவர்களும்

வாகாயிருந்தாலும் வையகத்திலூழிமட்டுஞ்
சாகாதபேர்சொற்கத் தலமீதுறைபவராம்

இருந்து மிறந்தவர்.

நெடுநாள்மருகன்மனை நீங்காதிருந்தவரும்
அடைவாய்மருமகன்றா னம்மான்மனைதனிலே

சதமாயிருப்பவனும் தமிழரியாமூடருமே
இதமாய்க்கவிபாடி யிரக்கம்போம்வாணர்களும்
பொய்பேசிகடன்வாங்கிப் பிழைத்துதிரிபவரும் ௬௬௰

மாறுவறுமையுற்றோர் வல்லமருந்துசெந்தூர்
தீராப்பிணியாளர் சிவிகைசுமந்தேபிழைப்போர்

மனைவிதனைவணங்கி வயிறுவளர்ப்பவரும்
நினைவுதடுமாறிசற்றும் நீங்காக்கவலையுற்றோர்

சொற்சோர்வுபட்டோருஞ் சொந்தமில்லாப்பொருட்கு
மிச்சமாய்பேசி வந்திருந்துக்கொளிப்போர்

மனைவிதனக்கஞ்சி வந்திருந்துக்கொளிப்போர்
முனையானராசசபை மூடராய்ப்போனவரும்

ஈரேழுபேரு மென்சாணுடல்படைத்தும்
சீர்கெட்டுயிரோடே செத்தபிணமானவர்கள்

சம்பத்துடன் பிணியில் தான்மெலிந்துவாழ்வதிலும்
துன்பமற்றேழையயெடுத் துண்ணல்மிகவுநன்றாம்

ஆனதிருமா தகன்றுவறுமைவந்தால்
ஞானம்போங்கல்வியும்போய்நாடும்பழித்திடுமாம்

தாய்பழுதுசொல்வாள் சபையேறவெட்கமுமாந்
தூயமனையாளுந் துரும்பாய்மதித்திடுவாள்

மெய்சொன்னாற்பொய்யாகும் விசாரமும்போம்
உய்யவிருந்துவரி லுயிரோடேசெத்தபிணம்

மேன்மையறிவுகுலம் வித்தைநலமற்றுளதும்
போமேயிதற்கிசைந்து போவதுவேமெத்தநலம்

சேனைமருந்துசெய்யுந் தீராவியாதியுற்றால்
மானிலத்திற்றுறுகை மாளுவதேயுத்தமமாம்

பொருளின் பலன்.

பொருள்தேடதுக்கமதைப் போற்றிவைக்கத்துக்கமதாய்
பொருளைச்செலவழிக்கப் போய்போதுந்துக்கமதாம்
காகத்தின்கூட்டில் கருங்குயில்முட்டையிட

மோகமுடன்காகமுந்தான் முட்டையென்றேஉண்ணுதல்போல்
ஈய்கள்தேன்கூட்டி யெடுப்பாரிடங்கொடுத்து

போயலைகின்றதொரு புத்தியீனம்போலும்
சோரத்திற்பெற்றபிள்ளை சொந்தமென்றுமுத்தாடி

பேரிட்டழைக்கின்ற பேடிதனைப்போலும்
மயலாகத்தேடியே மண்ணிற்புதைத்தபொருள்

மயலாகபொருளுமல்ல வவன்பொருளுமல்லவென்பார்
உற்றபொருள்தேடமன முற்றுலகமுமே

நற்றுதஞானிக்கு நாடெல்லாந்தன்னுடைமை
பொன்னறியாமூடரிடம் பொருளதுவுஞ்சேர்ந்தாக்கால்

மன்னுங்குறக்கைப்பூ மாலைபோல்கொண்டலைவார்
தேடுகின்றவல்லவர்க்குச் செம்பொன்னொருமசகம்

பொன்னாசையுள்ளவர்க்குப் போசனத்திலிச்சையில்லை
அன்னைசுற்றந்தர்ம மானதிலுமிச்சையில்லை

வெட்கமில்லையோகலாம் வேளையின்னதென்றுமில்லை
இக்குணமுள்ளோர்பேய்க்கிணையாகுமென்றனரே

பொருள்வகை.

மெத்தவுந்தானேகுவித்து வீட்டில்வைத்தநெல்தனை
நித்தமெடுக்கிலந்த நெல்லுமற்றுபோவதுபோல்

ஏலநமக்குமெழுத்தினளவாக்குஞ்
ஞாலமிசையிரவி நாழிகைபோல்நாளாகி

மாசவருடமென்று மாதத்தொகையாகி
மோசமாய்க்கொல்லு முறைமையறியாமல்

இன்னநெடுநாளிருப்போ மிதுவேசதமென்று
பொன்னைமிகத்தேடிப் புதைத்துவைக்குமாந்தர்களே

ஸ்ரீதேவிபூதேவி சிரிப்பாளிவன்றேனியாம்
மூதேவிசென்மமென்று மொழிந்தார்மனுநூலோர்

மிக்கதர்மம்பொருளா மின்பமென்றமூன்றினிலே
நற்குணத்தால்தேடும்பொருள் நல்லறமுமின்பமுறும்

வஞ்சனையாய்த்தேடும்பொருள் அத்தனையுமாகாது
மிஞ்சுபழிபகையா மென்பதனையுண்டாகும்

கூத்துபார்க்கவந்து கூடுஞ்சனம்போலும்
ஆற்றுக்கால்நீர்போ லைஸ்வரியங்கூடிவரும்

கூத்துமுடிந்தவுடன் கூடுஞ்சனங்கலைந்த
மாற்றம்போலாய்விடுமா மைஸ்வரியமுள்ளதெல்லாம் எஉ௰

புண்ணியமென்னாளும் புகழாகிற்குமல்லால்
மண்ணினிலென்றைக்கும் வாழ்வுகிற்கமாட்டாது

நல்லறிவு கயவர்.

தன்னைப்புகழ்வோருந் தாய்தந்தையைப்பேணார்
அன்னைசுற்றம்விலக்கி யயலார்க்குதவுபவர்

மேலோர்சொற்கேளாதோர் வேசைசதமென்றுரைப்போர்
பூலோகத்தொப்பனையைப் பொய்யென்றுரைப்பவருங்

கண்டாலுறவாடிக் காணாவிடஞ்சலிப்போர்
கொண்டபெண்டாள்செய்யுங் குறையைவெளிச்சொல்பவரும்

பொய்சாட்சிசொல்வோர் போற்றிவைத்துப்பிச்சைகொள்வோர்
தையல்சொற்கேட்பதுவுஞ் சபையில்பயனில்லா

வார்த்தையுரைப்பவரு மற்றுமிந்தபன்னிருவர்
பார்த்தால்மனுஷப் பதராம்பசாசிவரே

அக்கினியைக்கட்டலா மகலாநோய்தீர்த்திடலா
மிக்கதொருகஷ்ட மிருகமிணங்கிடலாம்

வல்லவிஷந்தீர்க்கலா மாண்டோர்குயிர்தரலாம்
வெல்லரியபேய்தனையு மிரட்டியேயோட்டிடலாம்

பறவைமிருகம்பேசப் படிக்கவுமேசெய்திடலாம்
வரப்போகவுஞ்செய்திடலாம் மறலியிடதூதரையும்

மணலைக்கயிறுக்கி வைக்கலாங்கயவர்களின்
குணமதனைத்திருப்பக் கூடாதுகண்டீரே ௭௩௰

வெல்லமிகக்குவித்து வேம்பின்விதையைப்பதித்து
நல்லதொருபாலூற்றி நாளும்வளர்த்தாலும்

புல்லறிவு கயவர்.

சாதிகுணங்காட்டுந் தகமைபோல்புல்லருக்கு
ஏதுரைத்துஞ்சற்குணங்க ளெள்ளளவும்வாராது

செல்வமதுவந்தவுடன் தெய்வந்தனைநினையார்
சொல்வரம்புசற்றுமிலை சுற்றந்தனைநோக்கார்

தர்மந்தனைநினையார் தக்கபழிக்கஞ்சார்கள்
கர்மியிவர்வாழ்வுவெகு காலநிற்கமாட்டாதே

உண்டென்றுநாளு முலகமுறைப்பதனை
திண்டுமிண்டாயில்லையென்று செப்புமவர்பேயெனலாம்

தோலெலும்புதின்னுநாய் சோறுநெய்யுமுண்டாக்கால்
சீலமுடன்வயிற்றிற் செறியாதவாறதுபோல்

சண்டாளரானவர்க்குத் தர்மநூலானதனை
விண்டாலவர்செவியில் வீழாதொருநாளும்

புலிக்கஞ்சியோர்வேடன் போய்மரத்திலேயேற
வலுக்குரங்குகண்டு வந்தவனையாதரிக்க

ஞானிக்குசுகமுமில்லை நாட்டிலோர்சாதியில்லை
ஈனமிலேச்சர்களுக் கெப்போதுநிரையுமில்லை

காமிக்கொருவரம்பு கருத்துமுறையுமில்லை
மாமிக்கயோகிக்கு வஞ்சர்வினையரில்லை
சந்தசுத்தபூசைக்குத் தானுமங்கசுத்தியில்லை
வித்தைபுகல்வாணருக்கு வேற்றுமைகளாருமில்லை

பல்லறிவு.

கள்ளருக்குற்றாருமில்லை கபடருக்குஞானமில்லை
எள்ளளவுந்துன்பங்களேதுசுத்தவீரனுக்கு
பொய்யனுக்குசாட்சியில்லை புலையருக்கிரக்கமில்லை
ஐயோவிரோதிக்கு ஆனதொருநேயரில்லை
தான்பிடித்தபிடியாய்ச் சாதிப்பவன்குரங்கு
ஆனசபையிற்குறிப்பு அரியாதான்பட்டமரம்
எ ரியாருடனெதிர்ப்போனேற்றகடிநாயாம்
பழிபாவத்துக்கஞ்சான் பசாசாகுமென்றிடலாம்
வந்தோர்முகம்பாரான் வனத்திலிருக்குங்கரடி
பந்தமுறுசபையிற் படுப்போன்கிடாமாடு
அடுத்தோர்க்கிடர்விளைக்கு மவனேகொடுந்தேளாம்
பிடித்தபிடியைவிடப் புல்லன்வலிசாறை
சற்றெனினுங்கல்விகற்றுச் சபையிற்படிக்கறியான்
புத்தாம்விழுந்துபட்டுப் போனதொருகாட்டுமரம்
தன்புத்தியன்றிபிறர் சாற்றுபுத்திகேளாதான்
வன்புற்றுவானரமாம் வாய்பேசாவூமையென்பார்
அம்புவியையாளு மாசர்பகையைப்பெற்றோர்
கொம்பிழந்தமந்தி கூகையுறவானபட்சி
கொட்டுந்தேள்போல்தீராக் கோபமுடையவன்றான்
குட்டியிட்டநாய்கரடி கொடியவனமிருகம்
மருங்காய்ப்பெரியோரை வந்தனைகள்செய்யாதான்
கருங்கல்லிலேயடித்துக் கைகால்வருத்தசிலை

பண்டிதாள்பரிட்சை.

முக்கியஞ்சேர்நூலின் முறையும்நிரையறிந்து
பக்குவமில்லாநாடிப் பரிட்சைதனையறிந்து

தேடியழைத்தபின்போய்த் தேகங்குணங்காலம்
பாடுகின்றநாடிகெட்டிப் பரீட்சைகளுந்தானறிந்து

சிந்தாதவாதபித்தச் சிலேற்பனத்தின்கூரறிந்து
வந்தபிணியும் வலுவுமிகத்தெரிந்து

கற்பங்கியாழங்கள் கனகுளிகைபற்பமுடன்
தக்கதொருசெந்தூரந் தயிலமுடன்சூரணமும்

இவ்வகையாய்லேகியமு மிதமறிந்துதான்கொடுத்து
அவ்வகையில்பத்தியமெத் தாகவேவையாமல்

எளிதானபத்தியத்தி லெப்பிணியும்நீக்கிவைத்து
தெளிவானவாரோக்கிய ஸ்நானமிகச்செய்வித்து

தந்ததேபோதுமென்று தான்மகிழும்பண்டிதனை
சந்ததஞ்சேர்தேவர்பதி தன்வந்திரியென்னலாம்

மிக்கபிணிவந்தால் வேணபொருள்தாரனென்று
மிக்ககுலதெய்வம்போல் மேன்மைமிகச்செய்வார்கள்

உற்றபிணிதீருமென் றுறுதிசொன்னாலேகுருவாம்
சற்றேமருந்துசெய்யில் தந்தையென்றுசொல்வார்கள்

பாதிலகுவானால் பண்பிற்றமையனும்
பாதியுந்தீர்ந்துவிட்டாற் பரிகாசமைத்துனனும்

ஏதுபொருளானாலு மீவதுமுன்னேயனும்
காதலுடன்மற்றுநாள் கடனாளியாவானே

அப்பாற்பகையாளி யாவர்கள்பண்டிதர்கள்
இப்படிலோப ரிருப்பாருலகினிலே

தீராதநோயருமை செப்பாதபொய்யரிடம்
வேரானபண்டிதரை மேல்மருந்துகேட்பவர்பால்

மூர்க்கரிடத்தினிலு மொய்குழலாப்பிரியா
நோக்குமவரிடத்தி லோபியர்கள்தம்மிடத்தில்

கத்ததுரோகியர்கள் கண்டதெல்லாமுண்போர்கள்
பத்தியத்தைதாழ்வுசெய்யும் பண்பில்லாமாந்தருந்தான்

மட்டில்லாப்பொன்னையள்ளி மாரியெனயீந்தாலும்
எட்டியடிவைப்ப தியல்பல்லபண்டிதற்கே

சுத்தம்.

வெண்ணீருடன் துளசி வில்வமருச்சுகந்தான்
பண்ணும்புதுப்பாண்டம் பழவர்க்கங்காயிலைகள்
செந்நெல்கவசமுடன் செம்பிரும்புவெண்கலங்கள்
பொன்னுடன்வெள்ளிமுதல் பூணும்நவமணிகள்
கோதில்லாவெண்பட்டு கோடிதுகில்யாவும்
பாதரட்சையாவதுடன் பத்தொன்பதிவ்வகைகள்
கீழோர்பாலுற்றிடினுங் கீழோர்களீந்தாலும்
தாழ்வில்லாமேலவர்கள் தானிதனையேற்றிடலாம்
ஆசைமிஞ்சுமின்னு ரதரபானத்திற்கும்
பேசரியாப்பாலர்கள் போந்தசிறுநீரதற்கும்
வேட்டையிலேநாய்கடித்து விட்டிட்டமாமிசமும்
தேட்டமுடன்பட்சிகள்தான் தின்றபழங்களுக்கும் ௭௩௦
இந்தவகைநாலுக்கு மெச்சிலிலையென்றுசொல்லி
முந்தமனுநூலின் முறையிலுறைத்தனரே
எத்தொழிலுமெக்காலமும் மிழிவுண்டேயல்லாது
சுத்தமதுவென்றவருஞ் சொல்லுதற்குநாவுளதோ

ஆகாமை.

மன்னர்பகையு மாதவத்தோர்தன்பகையும்
வின்னக்கொலைஞர் விகடப்ரசங்கிபகை
ஊரார்பகையு முற்றாருடன்பகையும்
வீரமந்திரிபகை மிகுந்தபணக்காரர்பகை
வல்லகணக்கர்கவி வாணர்குருபகையும்
வல்லமைசேர்பண்டிதர்கள் மந்திரிவாதிபகை
பெற்றபிள்ளைபெண்சாதி பின்னவர்கள்முன்னவர்கள்
உற்றபதினேழி லொருபகையுமாகாதே
ஆறடுத்தவூறதுவு மாசரிடசேவகமும்
நீரில்விளையாட்டும் நீர்மிகுந்தபேராறும்
தாசியுறவுபிறர் தாரமின்னார்நேசமதும்
நேசமில்லாத்தாயாதி நேசமாகாதுற்சனர்கள்

தன்னோடிணங்குவதுஞ் சத்ராதிகட்பதுவும்
பன்னகத்தையாட்டுவதும் பகடுநடத்துவதும்
மெய்விளக்கும்போதினிலே மின்னாருடன்புணர்ச்சி
மையிருளிலேதனித்து வழிபோகும்வல்லமையும்
நஞ்சுடனே தீமருந்தால் நாளும்பழகுவதும்
அஞ்சாமலெப்போது மலைகைகளையோட்டுவதும்
ஆர்க்குங்கடலோட மதிலேதான்சஞ்சரித்தல்
பார்க்குமதுவுண்ணல் பலநாள்களவுசெய்தல்
இத்தகையாய்சொன்ன திருபதையுமேமனதி
லுற்றாலிடறு முயிர்க்குலமாமிதுவே
சாரார்பயிரிடுவோ ரில்லாளிரண்டுடையோர்
ஊரார்போம்பாதையந்த யோரம்பயிரிடுவோர்
பிணைப்பட்டுப்பொய்சாட்சி பேசுமிவர்நால்வர்களும்
சுணைகெட்டபேரிவர்கள் துன்பத்துக்குள்ளாவார்
சிற்றூர்குடியிருப்போர் சீர்கெட்டபெண்டுடையோர்
பெற்றபிள்ளையிற்றிரளாய் பெண்ணாகப்பெற்றவரும்
அற்பனைச்சேவிப்பவரு மலக்கழிந்துபோவதல்லாற்
சொற்பச்சிலநாளில் தொந்தரைக்குள்ளாவார்கள்
அத்திககாய்கோவக்கா யைவிரலிதேற்றாங்காய்
சுத்தவெள்ளைகத்தரிக்காய் சோற்றுக்காந்தலிவைகள்
தின்பார்வொருநாளுந் தேவபக்தியில்லையென்று
முன்பாகநூலோர் மொழிந்தார்மனுநூலில்
துறந்தோரடங்காதார் துன்னிபணியோர்களையும்
புறம்பேசும்வஞ்சகர்கள் பின்னவர்கள்பெண்டுகளும்
கல்லாலவன்நெஞ்சிற் காணுமிவரெண்மறையும்
நல்லசபையிலொரு நாளும்வைத்துபேசவொண்ணா
ஆசனங்கள்தான்போடி லாயிசுவிர்த்தியில்லை
போசனமுந்தான்சமைத்தால் போமேஅயிஸ்வரியம்
தனக்கெண்ணெய்தான் தேய்த்தார் சந்ததிகட்காகாது
அனர்த்தமிதுமூன்றென் றருளினார்முன்னோர்கள்
யோகியொருபோதே யுண்பானிருபோது
போகியுண்பானமூன்று போதுண்பான் வியாதிஸ்,நன்

உடனொருநான்குபோ துண்ணுமவன்றனக்கு
இடையூறுண்டாகுமென் றியம்பினார்முன்னோர்கள்
வீரத்திலொப்பில்லா விக்ரமமேயானாலும்
வீரியமும்வாறும் விளம்பிடவுமாகாது
வேந்தர்குருபொய்யா மேன்மையுள்ளோர்கோபிகட்கும்
வாய்ந்தகடன்கொடுத்து வாங்குவதுநீதியல்ல
நாட்டுக்காகாதவரை நமக்கடங்காப்பெண்டீரை
மீட்டுமந்தராசனுக்கு மேலானமந்திரியை
துற்சனர்சினேகமதை தொட்டாலசையுமில்லை
இட்சணமேயைந்து யெடுத்துவிடவேணுமென்பார்
கடன்பட்டுத்தரித்தோர் கைசீட்டிலேசேஷம்
விடந்தீண்டிமீண்டதிலே யெவ்வளவுமேசேஷம் அ௨-ம
அக்கினியில்வெந்த அகந்தனிலேசேஷம்
மிக்கானசத்துருவை வெல்லுவதிலேசேஷம்
தெய்வப்பிரார்த்தனைகள் செய்துமதில்சேஷம்
உய்யபிணிமருந் துண்டதிலேபின்சேஷம்
வாணிபோய்மீண்டதிலே கடுகளவுசேஷமுடன்
ஆணியாம்பத்து மணுவும்வைக்கலாகாது

பலனில்லாமை.

சந்திரனில்லாவானஞ் சற்சனரில்லாதவூர்
மந்திரியில்லாவாசல் மதகரியில்லாவெம்போர்
மக்களில்லாச்செல்வ மதுரமில்லாதகவி
தக்கதினபதிகள் தானில்லாவெஞ்சேனை
பெண்ணுரில்லாதமனை பிறவியில்லாதவுடல்
விண்ணுனப்பாடல் வினையமில்லாவேசி
கோப்பில்லாக்கூத்துடனே கொங்கையில்லாபெண்ணழகும்
தாப்பில்லாச்சீவனங்கள் தந்திகளில்லாவீணை
பத்தியில்லாப்பூசை பார்த்திபரில்லாதபுறம்
சத்தியமில்லாதவாய் தானறியாவாணிபங்கள்
சந்தமில்லானபாட லுதாரணஞ்சொல்லாதகவி
நந்தாப்புனல்சேர் நதிவளமில்லாநாடு

தேசிகனில்லாதவித்தை தியானமதில்லாதீட்சை
பேசரியநல்லரிஞர் பெரியோரிலாதசபை ௮௩௰

குடிநலமில்லாநாடு குணமில்லாப்பெண்ணுசை
வடிவுற்றவாசமில்லா வானமிகுமலரும்

சேகரமில்லாக்கதை தீபமில்லாதமனை
சூகரம்போலுண்ணுகின்ற சுசியில்லாப்போசனமும்

கல்வியில்லாத்தேகங் கற்பனையில்லாதகவி
வல்லவிவ்வெண்ணுன்கில் வரும்பயன்களொன்றுமில்லை

தந்ததேபோதுமென்று தான்வாங்கிவைதியனும்
வந்ததேபோதுமென்று வாங்குகின்றராசாவும்

வெட்கத்துக்கஞ்சுகின்ற வேசையரும்வெட்கமில்லை
மிக்ககுலப்பெண்டீர் மேன்மையில்லைகஷ்டம்வரும்

அன்னையிறந்தா லுணவானதெலாம்நட்டமாம்
பின்னைப்பிதாவிறந்தார் போரானவித்தைநட்டம்

உற்றதுணையிறந்தா லுடலிலேபாதிநஷ்டம்
மற்றுமனையாளிறந்தா லன்றுதலைபோனதென்பார்

பருவம்போய்ப்பாலம் பண்ணுவிக்கும்விக்தைகளும்
பெரியகிழவனுக்குப் பெண்டிளமைப்பெண்ணும்

அத்ததரித்திரருக் கழகுடையபெண்டீரும்
இத்தன்மைமூன்றிலு மெய்தும்பலனிலையே

வாரியிலேபெய்ந்தமழை வயிறுபசியில்லாத
பேர்களுக்குப்போடுஞ்சோர் பிசாசுக்கிடும்பூசை ௮௬௰

பொன்னுள்ளோர்க்கீந்தபொருள் போதவிந்தான்கினிலும்
என்னபலனுமில்லை என்றனரேமுந்நூலோர்

அந்தணர்க்குமாவார்க்கும் ஆபத்திலேயுதவார்
இந்தவுலகி லிருந்தென்னிறந்துமென்ன

யார்க்குமுறையாதவித்தை யனேகவிதமாகிப்
பார்க்குள்படித்தென்னை படியாதிருந்துமென்ன

என்னகறிவகை ளினிதாயிருந்தாலும்
பின்னமதில்நெய்யில்லா போசனமுந்திருப்தியல்ல

தன்னால்இருவகிக்கத் தகாதவிரதமுற்றால்
என்னபலனுமில்லை யிடறுவருமுத்தியல்ல

தருணமறிந்துதவாத் தன்மைசேர்நண்பாளர்
அருமையாய்ப்பின்னு லுதவியுதவாமலென்ன

வாலிபத்திலெய்தாத வடிவுடையபெண்ணாளும்
சாலவிர்த்தாப்பியத்தாற் சார்ந்தென்னநீங்கிலென்ன

புருஷனில்லாவிதவை பொன்னுடையாபரணம்
வரிசையுடனணிந்தால் வையகத்தோரேசுவார்

பெற்றதாயில்லாத பிள்ளைதனையெவ்வாறு
வைத்துவளர்த்தாலும் வளங்கொடுக்கமாட்டாது

பல்லில்லாதோருமற்றப் பசியுள்ளோரானவரும்
நல்லருசிதானென்று நவின்றார்மனுநூலோர்

செய்ததவங்குறையுந் திருஞானசாத்திரமும்
வையகத்திலேமருந்து மந்திரமோடிவ்வைந்தும்

மெய்யென்றுரைப்பவர்க்கு மெய்யாய்விளங்கிநிற்கும்
பொய்யென்றுரைத்தாக்காற் பொய்யாகிப்போய்விடுமே

காடுபடாமற்பலன் கொடுக்குநற்பாவனைபோல்
நாடிக்கொடுப்பதுவே நன்றாகுமுத்தமமாம்

சிலதுநாள்பாடுபட்டால் தென்னைமரம்பின்பு
பலந்தருதல்போல்கொடுக்கும் பண்பதுவேமத்திமமாம்

வருடமெல்லாம்பாடுபட்டால் வாழையொருவிசைதான்
தரும்பலன்போல்கொடுக்குந் தர்மமுமேயதர்மமுமாம்

தெண்டனையில்லாவேலை நேயரில்லாமனைவி
கொண்டவர்க்குளடங்காக் கொம்பனையாளில்வாழ்க்கை

வண்டரிணக்கம் வருமைதனிற்சேர்க்கும்
மண்டலத்திலிவ்வைந்தும் வளர்தரவுமாட்டாதே

மாரிகாணுதபயிர் மக்களில்லாயில்வாழ்க்கை
ஏரிகுளமில்லாவூ ரிரவிகாணுவசனம்

அன்னைகாணுதபிள்ளை ஆவினைக்காணுதகன்று
பொன்னில்லாப்பூஷணங்கள் போசனமுண்ணுதவுடல்

காவுகாணுதவண்டு கலைகள்காணுக்குமரன்
மேவுகொழுநனில்லா மெல்லியர்களானவரும்

தோழர்காணுநேசர் சோடுகாணுப்பேடு
மீனுமதிகாணுத வெண்குமுதமானதுவும்
பெரியோரில்லாதசபை பெண்கள்தனில்மூத்தாள்
உரியதியாகியில்லா வூர்பதினேழாமிவைகள்
தாழ்வுதருமல்லாது சாந்தவளமாகாது
வாழ்வுகாணுவிளமை வாறுகுமென்றிடுவார்
நல்லோர்க்குச்செய்தநன்றி நாட்டிவைத்தகையெழுத்தாம்
பொல்லோர்க்குச்செய்தநன்றி பொய்கையுறம்நீரெழுத்தாம்
சுற்றமுண்ணுயில்வாழ்வுஞ் சுதியில்லான்பாடுவதும்
கற்றறியான்பாடுங்கவி கைம்பெண்ணிலையழகும்
துற்குணப்பெண்சாதி சொற்கேளாதவடிமை
மிக்கவிவையாறும் வீணும்பலனிலையே
ஊமைசெவிடருக் குரைத்தவுபதேசம்
சேமமென்றுபாவிகட்குத் செய்தவுபகாரம்
மேலுமுவர்நிலத்தில் விதைத்ததொருநல்விதையும்
சாலயிவைமூனுறுநுந் தண்ணீர்கரைத்தபுளி
குதிரைக்கிறுவுத்தன் கூறுகவிபுலவன்
சதிரானவாயுதங்கள் தனக்குச்சிலம்பியுமாம்
வேசைக்குநட்டுவனும் விளங்குபலராகமதற்
காசையாய்ப்பாடுவனு மைவருந்தானில்லாவிட்டால்
வத்தமுடன்மதிலிலெழுதிவைத்தபெண்ணழகைப்
பார்த்துமகிழ்ந்துபோம் பண்பாம்பலனிலையே
தேவாலயஞ்சுற்றித் திரும்பாததாள்தோளர்
தேவதரிசனங்கள் செய்யாதகண்கள்கண்ணே அஎ0
பகவான்தியானமதைப் பண்ணுதசிந்தையென்ன
ஜெகமீதுபகவானைச் சேவியாச்செங்கையென்ன
சிவன்மாலையுந்திதிகள் செய்யாதவாயென்ன
சிவன்மாலையும்வணங்காச் சென்னியுமேசென்னியதோ
தினமும்புராணகதை கேளாததென்னசெவி
முனையானபுண்யநதி மூழ்காததென்னவுடல்
மேவுமிவையெட்டுமில்லாதோன்பாழ்செனனம்
பாவியிவனிருந்தும் பலனில்லைவீண்பிறப்பாம்

ஞானமறிதல்கொடை யாளிதனவானாய்
ஆனதொருபூவலஞ்செய் வானாகிவிவேகியுமாய்
மிக்கதொருவித்துவான் விளங்குகின்றகீர்த்திவான்
உக்ராணவீர னுபகாரியாவருக்கும்
இவ்வகையிலோர்பே ரெடுக்காதசென்மமவன்
இவ்வுலகிலேமனித னென்றவனைச்சொல்லவொண்ணா
சீர்படைத்தவோர்மனுஷச் சென்மமொருயோசனைக்குள்
பேரெடுக்காப்பேர்மனுஷப் பிறப்பிற்கழுதையுமாம்

லோபத்தனம்.

தேன்றுளியொன்றாற்கடலைத் தித்திக்கச்செய்தாலு
மேன்மையுடன்மலையை மெழுகாகச்செய்தாலும்
பூவினால்வச்சிரத்தைப் போர்த்துதுளைத்தாலும்
மேவுங்கபடருக்கு மெய்ஞ்ஞானம்வந்தாலும்
ஊமைபடித்திடினு மூர்க்கமிலாப்பேடிக்கு
தாமேதான்வீர்ய தைரியமுண்டாயிடினும்
சித்தங்கயவருக்கு நீதிமுறைவந்தாலும்
இத்தலத்திலோபர்களுக் கீகைசற்றும்வாராதே
தின்னாமலுண்ணாமற் றேடிமிகச்சேர்த்து
புண்ணியமுஞ்செய்யாமற் புதைத்துவைக்குமுலுத்தர்பொருள்
தெண்டம்பெரும்பிடிக்கும் தீக்குந்திருடருக்கும்
வண்டமனவேசைகட்கும் வலுவந்தகாரருக்கும்
இதமில்லாப்பேடிகட்கு மெல்லாப்பிசாசுகட்கும்
உதவுமேயீயா வுலுத்தர்பொருளதுகாண்
ஆகாபதரெனினு மரியவிபூதியைவிளக்கும்
வாகாப்பழஞ்சுவரு மாடுறைஞ்சுமுள்மரமாம்
மாடுகடாவதுவும் வையகத்திலேயுழலாம்
கூடப்பொதிசுமக்குங் கூடிவருமேயதனால்
செத்தபிணமானாலுஞ் சிறிதுஉபகாரமுண்டு
புற்றதுவுமண்ணாகும் பொங்கரவுக்கேமனையால்
கல்லாலேயாலயங்கள் கனத்தபணியுண்டு
அல்லற்கழுதையென்றா லழுக்குப்பொதிசுமக்கும்

வாறுகோலானாலு மாளிகையெலாம்விளக்கும்
பேறுய்க்குரங்கு பிடித்தார்க்குதவிசெய்யும்
ஈயாதலோபிகளா லெவர்க்குமுபகாரம்
வாயாதவர்கொடுக்க மாட்டாரொருநாளும்
நெல்லின்பதரென்ன நீரினிலேபாசியென்ன
நல்லமரத்தில்மொக்கு நன்றாயிருந்துமென்ன
சீதேவியாருடனே சீர்கேடியானதொரு
மூதேவிதான்பிறந்து முக்கியமுண்டோவதனால்
தயவாயொருவயிற்றில் சார்ந்தவிவேகியுடன்
கயவர்பிறந்துமென்ன காரியமெல்லாஞ்சிதையும்
உச்சிதமாயார்க்குமுதவில்லாதார்வாழ்க்கை
நச்சுமரம்பழுத்து நடுவூரில்நிற்பதொக்கும்
செத்தபிணமதனைச் சிங்காரித்தாவதென்ன
கைத்தலத்தினாலிழுத்து காட்டிலேபோட்டுமென்ன
நாயானதுகொழுத்தால் நாட்டிலதையார்புசிப்பார்
ஈயாதலோபியச்கு எல்லாமிருந்துமென்ன
ஈயாதயில்மாந்த ரிருந்தென்னிறந்தென்ன
ஆகையால்மிருக மதனிலேசேர்க்கவென்றார்

இகழ்ச்சியீனம்.

கற்பனையில்லாத கவிதனையேகேட்பதுவும்
விற்பனமில்லாரிடத்தில் வேண்டுங்கொடைபலவும்
ஆதரவில்லாதபெண்டி ரருமையில்லாசேவகமும்
பேதமின்றிப்பேர்விளங்காப் பிள்ளைதனைபெற்றதுவும்
ஊழிவினையு முதிர்கொடுமையல்லாமல்
வாழ்வல்லவிரைந்தும் வகையாகுங்கண்டீரே
நீர்நுழையாவிடத்தில் நெய்நுழையும்நெய்நுழையாய்ச்
சார்பிலேபால்நுழையுந் தானதுபோகாவிடத்தில்
மீறிப்புகைநுழையும் வெம்புகைபோகாவிடத்தில்
தாரித்திரனுமது தன்னில்நுழைவானும்
தக்கதராதரங்கள் தானறியாப்பேரிடத்தில்
மிக்கவிருந்துண்பதிலு மோடெடுத்திரத்தல்நன்று

தூயவறிவில்லாச் சுதரைப்பெருவதிலும்
பேயதனைப்பிள்ளையாய்ப் பெற்றுவளர்த்தல்நன்று
உள்ளன்பில்லார்களுடனட்புக்கொள்வதிலும்
கள்ளுண்ணும்வம்பர் கழுதைகளைமேய்த்தல்நன்று

வெளியிடக் கூடாதவை.

ஆசானுபதேச மரிவையர்கள்புணர்ச்சி
மாசானசோரம் மனதடக்கமுற்றபொருள்
மானம்பிறர்மான மறந்துடனே தான்கொடுத்தால்
தானுமகத்திருக்குந் தானத்தினல்விளையும்
இல்லறத்தின்கேவலர்கள் யாவரிடமீதுபத்துஞ்
சொல்லவொண்ணுதினமென்று சொன்னார்மநுநூலோர்
தன்னகத்தாளன்றுமறு தாரமேலாசையற்றால்
பின்னொருவர்தாரமது பெண்டீரைச்சேராரோ கூாய
பறையன்பறையனல்ல பகர்ந்தமொழிதப்பிதமாய்
பறைவோன்பறையனென்று பகர்ந்தாரேமுந்நூலோர்
ஞானமுற்றசற்குணமு நாளுமில்லான்கற்றகல்வி
ஈனப்பறையர்வீட்டி லிருக்குங்கங்காசலமாம்
தண்ணீரின்நன்மை தரையும்வற்றினலழியும்
பெண்ணோர்கள்நன்மை பிறர்கமலத்தாலழியும்
கோதில்லாமாதவசு கோபத்தினலழியும்
வேதகுலநன்மை விபசாரத்தாலழியும்
மன்னவர்கள்நன்மை மனுநீதியாலழியும்
இந்நிலத்திலுத்தமர்கள் யாவர்களுஞ்செய்தநன்றி
பொல்லாததன்னகத்துப் பெண்ணாலழியுமென்று
வல்லோர்கள்முன்னல் மனுநூலுரைத்தனரே
பருவதமும்பார்க்கடலும் பார்வதியும்லட்சுமியும்
அரிதாய்ப்பிறந்திடத்தி லரியானும்வாழ்வதுபோல்
பூமியிலேதங்கள்மணைப் பெண்ணுள்பிறந்தவிட
மாமியார்வீடே வளமென்றுரைப்பார்கள்

மேகடு.

காவலர்களாணை கெடுப்பதுவுமேயடங்கா
நாவுமிகுகோபமுட னமதுணைகேளாவடுமை

ஆகாயமின்றி யதிகச்செலவுகளும்
காதாரக்கேளாச்சொல் கவியில்பிச்சங்கண்டெழுதும்
காட்சியின்றிச்சம்வழக்குந் தயிரியமின்றிச்சங்கவலை
பேச்சில்சரசமின்றிப் பேசும்பரிகாசமுமாம்
பத்தாவின்சொற்கடங்காப் பாவைதனைப்பெண்டாக
வைத்தான்படுந்துக்க மதனைவிடதுன்பமுமாம்
ஓரவிகாரமா யுயர்ந்தோர்க்குச்சொன்னவர்கள்
ஊரழியுமேசுமக்க உலகமதுநடுங்கும்
உப்பிட்டபாண்டமிலை யுதிர்ந்தமரம்போலாம்
ஒப்பில்லாவாழ்வும்போ முற்றார்பெற்றார்பாழாம்
மாதேவியான மலர்மாதகன்றிடுவாள்
மூதேவிசேர்வள் முடிவில்நாகமெய்தும்
என்னேரஞ்சண்டையு மட்டில்லாச்சிரிப்பதுவும்
சின்னஞ்சிரியாரிணக்கந் தீராக்கொடுங்கோபம்
வேசையுறவும் விவேகமில்லாரிடத்தில்
ஆசராய்ச்சேவகங்க ளாறுமிவைகெடெய்தும்
தேடாப்பொருளழித்தல் தீராதகோபம்ரண்டும்
கேடாய்முடியுமல்லால் கீர்த்திசற்றும்வாராதே
ஞானந்தனங்கல்வி நாடிவருங்கால
மானோர்மேலாசைதரும் வாழ்வுப்போந்துக்கமுமாம்
என்னன்றியைமறந்தார்க் கெவ்வாறுமுடிவுண்டாம்
மனமறிந்துசெய்நன்றி மறந்தார்க்கீடேற்றமில்லை
இமிசைப்பட்டாற்று தேழையழுதகண்ணீர்
வமிசத்தைதேய்க்கு மாமுங்கூர்வாளெனதால்
நீங்கானவாங்காரஞ் செல்லுமிடமானதன்றித்
தாங்கவிடஞ்செலுத்தல் தப்பாமற்கேடுவரும்
தாழ்ந்தாருயர்ந்தார் குறிபாமெனவறிவால்
ஆய்ந்துமரியாதைசெய்யா தாராகிற்கேடுவரும்
சரியானபேரையன்றித் தன்னிலதிகபல
பெரியோருடனெதிர்த்தாற் பிராணபயமுண்டாகும்
இத்தலத்தில்யாரொருவர்க் கெந்நாளுமுற்பாதம்
புத்திபிரதானமாய பொல்லாங்குசெய்வார்கள்

புத்திரர்களில்லாமற் போவதுவுமல்லாமல்
அர்த்ததரித்திரர் யற்பாயுசாவார்கள்

ஏற்கையுடனிவரு மேதேதுகாரியமுந்
தீர்க்கவிசாரணைகள் செய்யாரேயாமாகில்

பின்னாலே துன்பம் பிணக்குமிகவுண்டாகும்
அந்நாளேகிரியினாலந்துகுடிகெட்டதொக்கும்

சத்ராதிசொல்லைத் தந்தாய்நினைப்பவரும்
உற்றமனையாட்டிக் குண்மையுரைப்பவரும்

கொடுத்தகடன்கேட்டாற் கோபங்களுற்றவரும்
எடுப்பாய்பெரியோரை யெண்ணாமற்பேசினவர்

பெரியதனம்வந்தவுடன் பின்முன்னும்பாராமல்
இருவிழியாற்சற்று மேரிட்டுபாராதார்

இனியபரிதானத்தி லிச்சைவைத்தேயொருவர்க்
கனியாயஞ்செய்துபொல்லா வவதிவரச்செய்தவர்கள்

பாரிதனைவிட்டுப் பரத்தைமேலாசைவைத்த
பேரொழுவருக்கடவர் பேய்காய்ப்பிறப்பாகும்

கூடிப்பிரிவதனால் கொடியகுதாடுகையாற்
கேடுவருமிதற்குக் கெணிதமில்லையென்றனரே

கண்ணினாற்காண்பதுவுங் காதினாற்கேட்பதுவுந்
திண்ணமுடன்மின்பின்னாய்ச் செப்பினாற்கேடுவரும்

வித்தமகன்ஐஸ்வரிய மேதுங்கிளைகூட்ட
மற்றும்பயருழிவி னாலுமகிழ்ச்சியினால்

ஏர்க்குமெளியோர்கள்முதல் யாவரையுந்தூஷணித்தல்
தீர்க்கமிதுகேடுவருந் திண்ணவனூர்வள்ளுவனார்

நெஞ்சிற்பயமதுதா னேரிடயாவரையும்
அஞ்சவஞ்சச்செய்தா லவர்கட்குகேடுவரும்

திணையளவுநன்றிமுன் னஞ்செய்தாரேயாமாகில்
அணுப்போதிலுமறக்க லாகாது தான்மறந்தால்

அந்தணர்க்குங்கோவுக்கு மடாதுபொல்லாங்குசெய்தால்
நிந்தனையும்வந்தவர்க்கு நேரிடுமென்றேயுரைத்தார்

ஆவலுடன்தன்பிழைப்புக் காதாவொருவருக்குந்
தீவினைகளெவ்வளவுஞ் செய்யாரேயாமாகில்

நீண்டதொருதன்னிழல்தா னின்றடியிலாவதுபோல்
ஆண்டுநூறுனலு மவரைவிட்டுப்போகாது
முன்னிலதிக மிடிமையதுவுண்டாகும்
பின்னுமேலேழுவேழ் பிறப்பும்விட்டுப்போகாது
செய்ததொருதீவினைதான் செய்தவர்க்கெப்போது
மெய்துமென் றுசொல்லி விளம்பினர்வள்ளுவரும்

அரிது.

அரிதரிதுமானிடர்க ளாகப்பிறப்பதுதான்
உரியதொருகூன்குருடு ஊமைசெவிடுபேடும்
நீக்கிப்பிறக்கரிது நோய்ப்பிறந்தாலும்
தீர்க்கமுற்றஞானஞ் சிறந்தகல்விநற்குணங்கள்
வாராதரித்ரிது வந்தாலுந்தானதர்மம்
நோய்த்தரித்தரிது நெஞ்சிற்றரித்தாக்கால்
நீணிலத்திற்றுன்றுமல் நெடுநாளும்வாழ்வுபெற்று
வானவர்கோன்றன்பதமும் வருமென்றுரைத்தனரே

இனிது.

இனிதினிதுவேதாந்த மினிதினிதாமன்பருள்ளம்
இனிதினிதுகாணுக்கண் ணேதுங்கேளாச்செவியே

கொடிது.

கொடிதுகொடிதென்பதுதான் குவலயத்திலேவறுமை
இடருமதிற்கொடிது இளமைதனிலேவறுமை ௬௬௦
அதிற்கொடியதாமருந்தி லகலாதவெவ்வியநோய்
அதனிற்பெருங்கொடிது அன்பில்லாத்தம்பியுமாம்
அதனில்மகாகொடிது அடங்காதபெண்சாதி
அதனிற்கொடிதுண் டவளோடுறங்குவதே

பெரிது.

பெரிதுபெரிதிந்தப் பேருலகுநான்முகன்றன்
வரியப்படைப்பாகு மவன்மால்வயிற்றுதித்தோன்

மாலோகடல்துயின்றான் வாரிகுருமுனிவன்
பாலொடுக்கமாமுனிவன் பண்டொடுக்கங்கும்பமதில்

கும்பமோபூமியதிற் குள்ளாம்பொடிமண்ணும்
தம்பமொருபூமியாந் தலைப்பாரஞ்சேடனுக்கு

சேடனுமையாள் சிறுவிரலி மழியாம்
ஈடில்லாதவுமையா ளிறையவர்க்குள்ளொடுக்கம்

தொண்டரிதயத் தொடுக்கமிறைவன்றான்
தொண்டர்பெருமைதனைச் சொல்லமுடியாததுவாம்

முக்கியமுள்ளது.

தலத்தினிற்சிதம்பரமாந் தாருவினிற்சந்தாளம்
பிலத்திலேமாருதமாம் பிரணவமாமந்திரத்தில்
வேதத்தில்சாமம் விரதமேகாதசியாம்
மாதத்தில்மார்கழியா மலைதனிலேமாமேரு
நிலத்திலேகாஸ்மீரம் ரிஷிகளிலேவஜிஷ்டர்
குலத்தில்மறையோராங் குதிரையிலுச்சிரவணமாம்
வாரத்திலாதித்த வாரமந்தகான்மீனில்
பேருற்றவாதிரையாம் பெருமுனியும்நாரதனும்
தனத்திற்குபேரான தானமேதானமுமாம்
மனுக்களிலேராசாக்கள் வாரியிலேபார்க்கடலாம்
மோகத்திற்புட்கரமாம் விலங்குகளிற்சிங்கமுமாம்
யாகந்தனிற்சிரேஷ்ட மச்சுவமேதமென்பார்
மாமணியில்மாணிக்க மலரிலேபத்மமலர்
காமதேனுப்பசுவில் கங்கைநதியாம்நதியில்
தமிழிலகத்தியராந் தந்தியிலைராவதமாந்
தமனியமாம்லோகத்தில் தானியத்திற்செந்நெல்லாம்
பட்சிகளிலேயுவணம் பாம்பிலேவாசுகியாம்
மச்சத்திலேமகரம் வடிவதனிலேரதியாம்
கற்பிலருந்ததியாங் கபிலராஞ்சித்தர்களில்
செப்புகின்றவாக்கில் ஸ்ரீராமச்சந்திரனும்
அசுரர்குலத்திற்பிரகலாதனனேயுத்தமனும்
வசியமுறுபடையில் வச்சிராயுதமாகும்

சங்கிதத்திற்பாஞ்சசன்யஞ் சந்திரனுங்கிரகத்தில்
சங்கும்பதவியிலே சாயுச்சியமாகும்
போகத்திலிந்திரனும் புஷ்பகமலர்வனத்தில்
வாகொத்தவில்திறத்தின் வாழ்விலேமைந்தர்களாம்
உடையிலேபட்டாடை யுத்தியிலேயூகிமந்திரி
கொடையிலேதான்கர்ணன் குணமூன்றில்சாத்மீகம்
மன்னும்புராணத்தில் மாபாரதமாகும்
துன்னுஞ்சுடரொளியில் சூரியனேமேலொளியாம்
ஆடுமீனிராசி லதகந்துலாமாகும்
வாடாதநுண்ணியநூல் வள்ளுவனார்சொற்குறளாம்
சுவையாரிலேலவணந் துணைவரிலிலக்குமணன்
சிவமணியிலக்குவடந் தேசத்தில்சோழதேசம்
பொறுமையிலேபூதேவி போரிலேராவணனும்
திருமாலாம்ராகவனுஞ் செய்தபோரேயதிகம்
ஓசையிலிடியேறு ஊரிலயோத்தியதாம்
ராசரிலேராசாதி ராஜனும்விக்கிரமன்
அன்பாகச்சொன்னவிந்த வறுபத்துநான்குமே
முன்பாமுதன்மையென்று முன்னோர்மொழிந்தனரே

கொடுமையாலழிதல்.

தக்கவிரணியனுஞ் சக்கிரவர்த்தியாம்பிதியும்
மிக்கானவாகுலங்கள் மேனுளிமேலநகுலன்
பந்தமுறுகின்றசிசு பாலனறுவர்களும்
நிந்தனையினாலே நிர்மூலமானார்கள்
கஞ்சன்துரியோதனனுங் காளமுனிவன்சகுனி
வஞ்சகஞ்செய்வாதாவி மாரீசனுங்கவந்தன்
பூதகியசோமுகியும் பொல்லாதசூர்ப்பநகி
வாதுபுரிதந்த வக்கிரனென்பவனும்
சகடனுடவில்வலனுஞ் சலேந்திரமகாசூரன்
விகடன்பிரலம்பன் மேனுளதாசூரன்
மிஞ்சுகொடியோரா மிவர்கள்பதினெழுவர்
வஞ்சகத்தினலிவர்கள் வம்மிசத்தோடேயழிந்தார்

சூரனுடன்தாருகனுந் தூர்ப்பானுகோபனுடன்
வீரமிகுசிங்கமுன் மின்னுள்சோமுகியும்

தீயராமந்தத் திரிபுராளானவரும்
மாயமதுகைடவர்கள் மாயாவிதுந்துபியும்

மாலிசுமாலியுடன் மகிடாசூரன்சம்பரம்
காலகேயநிவாத கவசருடன்தாடகையும்

இடும்பன்பகாசூர னிரணியாட்சதனென்போன்
கடுங்கோபச்சதரான் காலகதியாலழிந்தார்

தாசியங்கம்.

புருவநெறியா மல்விழி புரளாமலேவெளியில்
தெரியாமலேயங்கச் சேட்டைகளுஞ்செய்யாமல்

அணுவளவுத்தலையை யசைக்காமலேமிடறு
தனுல்பொருளாமல்சுருதி தந்திலயக்கியானம்

நீதியாய்த்தொனிவீணை நேராயதிற்றந்தி
நாதமிட்டுபூசை ரண்டுஞ்சரியாகம்

அமுர்தரசதாளி தாய்மதுரசங்கீதம்
காமரசமாய்ப்பாடுமவள் தாசிமகள்தாசியென்பார்

காயமேல்விழியுமுயர் கண்மேல்மனமும்வைத்துக்
காயலபினயமுங் காட்டுமவளேபாதம்

பாதாளச்சுருதியங்கம் பாங்காகவேசெய்து
வாதாளஞ்செய்பவளே மத்தடியாமென்றிடலாம்

பலராககீதங்கள் பாங்கானதாளங்கள்
நலபாகப்பாடுமவன் நல்லதொருபாடகனும்

தாளத்திலேநினைவு தரித்துநடனமிடும்
வாளுநற்றசத்பாத்ர மறிவானநட்டுவனும்

தாளலயமார்க்கந் தப்பாமலிங்கிதமாய்
வீணும்பலகைச்சேவை விழைவோன்பரிசனனும்

வேசையர்தமிவலம்விட்டு மேல்விடமுஞ்சென்றுக்கால்
காசுபணமற்பமுமாய்க் கணிசங்குலைந்துவிடும்

வேசையர்கள் வரலாறு.

மிக்கவிலைமாதர் வீடுசந்தைக்கடையாம்
பக்கல்பொதுவம்பலமாம் படுக்கைவீடென்பதுகாண்

சந்திபிற்பாய்மெத்தையாந் தண்ணீர்பந்தல்தருமம்
பந்தமுறுதேகம் படித்துறையதென்றிடலாம்

சூதாடுசோலைதுகில் துடைகள் தண்ணீர்பந்தல்
மீதிலேகட்டிவைத்த மிக்ககதலிமாம்

மையாடுங்கன்னியவள் வாரணிந்தகொங்கைரண்டும்
கையாடும்பந்து கடைவெலுமிச்சம்பழமாம்

பாகமுறுசெவ்வாய் படிகமதிற்கொப்பாகும்
ஏகுமவள்மோகமது எட்டிக்கனியெனலாம்

பாசமுடனிவ்வாறு பாங்குடையார்தீங்குபுரி
வேசையாமேலாசைகொள்ளல் மேலவர்க்குமேன்மையல்ல

பெண்களால் பங்கமடைந்தவர்.

சந்திரனுமிந்திரனுந் தன்னுடலின்பங்கமுற்றார்
சந்ததஞ்சேர்வாலி சடாசூரன்கீசகனும்

எண்ணரியவாழ்வுடைய யிராவணனென்பவனும்
பெண்ணாலேபங்கமுற்றுப் பிராணலயமானார்கள்

சுந்தோபசுந்தரென்னுஞ் சூரிருவர்களும்
அந்தமிகுமோகினிமே லாசைகொண்டுமானார்கள்

வையகத்திலொப்பில்லா மயிலனுமெழில்சேர்
தையலரைக்கண்டால் சவுரியமும்மில்லாது

மானார்குணங்குறியிவ் வாறேதெரியாமல்
தானவர்மேல்மோகித்தால் தப்பாமல்துன்பம்வரும்

புருஷன்வாக்கிய பரிபாலனஞ்செய்தவர்.

ஆதியருந்ததியின் னளுங்கவுசிகையுஞ்
சாதுகுணச்சாலை சந்திரமதியென்பவளும்

உத்தமியில்மிக்காக வேந்துநளாகினியும்
பத்தாவின்வாக்கியபரி பாலனமேசெய்தவராம்

மநுநீதி காதல்.

மூன்றுயுகத்திலும் யமனுனோர்.

இரேதாயுகத்திற் கெடுகாயிரேணுகையாம்
திரேதாயுகத்தினிலே சீதையெனும்பெண்ணாகும்

துன்னுதுவாபரத்திற் றுரோபதையேகூற்றவளாம்
இந்நாள்கலியுகத்தி லில்லமெல்லாங்கூற்றுப்பெண்

பெண்களுக்கு சுவாதீனமில்லையெனல்.

பெற்றோர்கள்பேதையிலும் பின்புருவத்திற்புருஷன்
மற்றுவருமூப்பினிலே மைந்தர்களேகாப்பவராம்

முக்காலும்பெண்ணுக்கு முயர்ச்சியொன்றுமில்லாதால்
மிக்கானபெண்சன்மம் வீண்சன்மமாகுமென்றார்

புருடனேதெய்வமென்று போற்றுகின்றகற்புடையா
ளரிதானவாண்சன்மத் ததிகமென்றுசொல்லினரே

பத்தாவேதெய்வமென்று பணிந்தேற்றுங்கற்புடையா
ளுற்றமழைபெய்யென் றுரைத்தாலுமாரிபெய்யும்

பெண்கள் வரலாறு.

மெத்தவழகுடனே மேன்மையுள்ளமின்னாளோர்
புத்திரனைப்பெற்றவன்றே பேரழகுமேன்மைகளும்

மேலானகன்னியர்கள் விரகத்திலேயழுந்திக்
கோலமெல்லாஞ்சீரழிந்து குரங்காகாப்பேருமில்லை

சதிராய்த்தன்னில்லைவிட்டுத் தனிவழிபோமின்னோர்க்குப்
பதிவிரதாதாபமில்லை பங்கம்வந்துநேரிடும் தூ.ய

சரசகுணமில்லாத தையலரைச்சேர்வதிலும்
விரைவாகச்சந்நியாச வேஷமுற்றல்நன்றாகும்

அன்பில்லாப்பெண்ணின்மே லாசைகொண்டுசேர்வதிலும்
முன்பாகச்சற்குணப்பெண் முலைகண்டாற்போதாதோ

பேரிளம்பெண்கள்பல பேர்வையுணர்வதிலும்
காரிகையாம்வாலையொரு கன்னிதனைச்சேர்தல்நன்று

துற்கந்தம்வீசுமுடல் தோகையரைச்சேர்வதிலும்
நற்கந்தம்வீசுமுடல் நாரியரைக்காணல்நன்றாம்

பெண்ணொருத்திபேசினார் பேருலகமுமடங்கும்
பெண்ணிருவர்பேசினாற் பெருவானின்மீனுதிரும்

அலைவாரியுஞ்சுவறு பாயிழையார்மூவருக்கும்
பலபேர்தான்கூடிலென்ன பாடுபடுமோபூமி

ஆசைகொண்டான்போலே யபினயித்துமேல்விழுந்து
பேசுகின்றவஞ்சப் பிரியமரியாமல்

அன்பில்லாவேசைநமக் கன்புள்ளாளென்றெண்ணி
நம்பினவரெல்லாம் நாயினுங்கீழாவார்

கர்மகாண்டம்.

பூதலத்தோர்க்காகப் பொதியைமுனிநாயனுமுன்
காதலுற்றச்சொன்னகர்ம காண்டத்தியல்புசொல்வாம்

சமயமில்லாதார்க்குச் சளமாமகநோயும்
கர்மவியாதிவந்த காரணத்தைச்சொல்லுகிறேன் ஆசாய)

செய்யுவுருவழித்தல் சிவசெங்கைதவளைத்தல்
வைதுதந்தைதாயை மனம்நோகவேபேசல்

நந்தவனமழித்தல் நசதாக்களைப்பழித்தல்
நந்தவனத்தில்மல ராதவரும்பூசொய்தால்

திட்டமுட்டிப்பாவஞ் செய்தகொடியோர்க்குக்
குட்டநோய்வந்து கொடுமைசெய்யுமென்றனரே

நாகமுடனூர்வனங்கள் நல்லபறவைபட்சி
சாகவேகொன்ற சண்டாளரானவர்க்கு

குதிலாவலிக்கைவலி குமரகண்டன்முசலி
சதிராகவேவந்து சாருமெனவிசைத்தார்

உத்தமரைப்பழித்து உதாசினங்கள்பேசுவதும்
பத்தர்சித்தர்பாவம் பற்றித்துடர்ந்ததினால்

ஆதிசிவதலங்க ளானதனைப்பழித்துக்
கோதுபடச்சினந்து கொடுங்கோபம்செய்வதினால்

கற்புடையமின்னார்மேற் காதலதுகொண்டதினால்
தப்பிதமாய்ப்பித்தந் தலைக்கேறியேபிதற்றி

பண்பாய்பலகிரி பதினெட்டுமெய்துமென்று
முன்பாகத்தட்சணா மூர்த்திமொழிந்தனரே

பச்சைமரங்களைப் பட்டைவெட்டியுரித்தும்
மிச்சந்தளிர்கொழுந்து வேர்முதலாய்வெட்டுவதும்

குளிர்ந்தமரத்திலேகாய் கொம்புதனைமுறித்தல்
அருந்தமலராப்பூவை யனவரதங்கிள்ளினதால்

மண்டைக்கரப்பன் வாயுவொருதலைநோய்
மண்டையிலேகுத்து மகத்தானபீனசங்கள்

மாறாக்கபாலத்தின் வாய்வானநோய்தானும்
வீறாய்வந்தெய்துமென்று விளம்பினார்மாமுனிவன்

வித்தானதையழித்து மேலுமிதைத்தின்றதினால்
பக்தியுடன்கன்றுக்குப் பால்விடாத்தோஷமதால்

பாலரையழித்துப் பச்சைமரப்பிச்சுகளைச்
சாலயிளம்பயிர்கள் தன்னையழித்ததினால்

மானார்க்குக்கெர்ப்பநோய் வருமவர்க்குமைந்தரில்லை
ஆணலிப்பாவிகள்தா னந்தரங்கச்செல்லவொண்ணா

சூரியனைத்தோத்தரியாத் தோஷமதனாலும்
நீரிலுயிரைப்பிடித்து நெருப்பிலிட்டுசுட்டதினால்

மடிப்பாய்ப்பிராணிகளை மாயவேசெய்வதினால்
துடிக்கவுயிரோடதனைச் சுடுமணலிற்போடுவதால்

நல்லநிழல்மரத்தை நாருரித்துக்கொண்டதினால்
வல்லமையாய்ப்பச்சை மரங்கள்தனைவெட்டினதால்

பசித்தோரிருக்கவதைப் பாராமலுண்டதினால்
விசமாய்ச்சுரதோஷம் சேருமென்றேயுரைத்தார் ௲௬௰

மாதாபிதாவை மனம்நோகச்செய்ததினால்
வேதாந்தசற்குருவை மெய்நோகவைத்ததினால்

வீம்பானபேச்சுகளும் விசுவாசபாதகமும்
நாய்பெரியோரென்று பல்லரையும்பழித்தல்

தெய்வநிலையழித்தோர் தினந்தினமும்பொய்யுரைத்தோர்
வையகத்திற்பாண்டுநோய் வந்தேமெலிந்திடுவார்

ஊனதைத்தின்ன உயிர்வதைகள்செய்ததினால்
மானகற்பழித்துப்பூ மரங்கள்தனைவெட்டினதால்

புண்ணியந்தான்செய்யாமல் புண்ணியங்களைக்கெடுத்துத்
தண்ணீர்குளமேறி தன்னைபுதைத்துவிட்டும்

நிறுப்பதளப்பதுவும் நிரைகள்குறையவிற்றும்
மாறுபடாநீரில் மலமூத்திரங்கள்விட்டும்

துராகதமாயிவ்வாறு துன்பங்கள்செய்தவர்கள்
இராணிக்கழிச்சல்வந்து கெடுவாரெனவுரைத்தார்

பொல்லாக்கடுங்கோப பொய்யேமிகுத்திருக்குஞ்
சொல்லுவதைபின்மறுத்துத் தூஷணித்துப்பேசுபவர்

உண்டுமிகப்பேச்சுகளால் ஊராரைவைதவர்க்கும்
திண்டுமிண்டாச்சிவசெந்தை நிரைக்கவேகொன்றவர்க்கும்

கன்னத்திற்புத்து கண்டேசிவிப்புருதி
கன்னத்திற்சூலை கடிதானபல்லாணை தளம

தந்தரோகங்கள் சகிக்கரியாவாய்புத்து
தந்தரோகஞ்சூலை தப்பாமல்வந்திடுமாம்

சற்குருவைத்தூஷணித்தோர் தன்மையில்லாக்கோபத்தால்
முக்கியஞ்சேர்பாதையிலே முள்ளதனைப்போட்டவர்க்கும்

பச்சைமரமதனைப் பங்கமுறவெட்டினர்க்கும்
உச்சிதமாய்ப்பூவிலேகா யுதிரவடித்தவர்க்கும்

வண்டுகடிகறப்பன் மகத்தானகுட்டநோய்
என்றுமிவாகட்குவந் தெய்துமென்றார்மாமுனியும்

பத்தர்சிவசித்தர் பரமசிவயோகிகளைச்
சிந்தங்கலங்கவே.செய்தகொடும்பாவிகட்கும்

வில்லாலுமம்பாலும் வெடிமருந்துகுண்டாலும்
கல்லாலும்பொல்லாக் கபடத்தார்சிவசெந்தைக்

கொன்றகொடும்பாவிகட்கு கொடிதானமார்பாணி
கண்டமாலைபிளவை கழல்வாதம்வந்திடுமாம்

சாங்கிசையாப்பெண்கள்தமைக்கவனித்துப்பார்த்தவர்க்கும்
ஏங்கிமவர்போகத்தி லின்பமுற்றபாவிகட்கும்

மின்னாரைக்கண்டு விலகாமற்போனவர்க்கும்
பின்பவரைத்தூஷணமாய்ப் பேசிபழித்தவர்க்கும்

தப்பிதமாகப்போய்ச் சத்தியங்கள்செய்தவர்க்கும்
மெய்ப்பானதெய்வத்தைமேனி நிந்தைசெய்தவர்க்கும் குஷ்டி

பலதாமுயிர்வதைகள் பண்ணுவதைகண்டிருந்தும்
விலக்காமற்பாத்திருந்த வேட்டைநாயானவர்க்கும்

கண்ணில்வியாதிவருங் கண்ணொளிவுதான்மறையும்
தொண்ணூற்றுயர் றுநோய் தொடருமென்றார்மாமுனியும்

பேறுனதேதுமுயர்ப் பிராணிதனைத்தானபிடித்து
கூறுகத்தூக்கிவைத்துக் கொண்டகொடும்பாவிகட்கும்

கோவதனைக்கொன்றவர்க்கும் கொடிதானகண்ணிவைத்து
சீவசெந்தைநீர்துறையிற் சேதமேசெய்தவர்க்கும்

அலரும்பிராணிகளை யழுக்கியதன்னுடைய
தலையறுத்துமிக்கருடல் தன்னையெடுத்தவர்க்கும்

ஈனமிறக்கமற்ற யிராட்சதரையொத்தவர்க்கும்
ஆனந்தவாழ்வுவக் தழுக்குமெனவுரைத்தார்

திறந்தவேமுற்பிறப்பிற் சேயிழைமார்தங்களுக்கு
மருந்திடுசெய்து மயக்கிக்கர்ப்பழித்தவர்போல்

மயலானபெண்போலே மறுஜென்மத்தினிலவளும்
சயரோகமாகவந்து சார்குவாளெனவுரைத்தார்

மார்க்கமதில்நிற்கு மரங்கள்தனைவெட்டினவர்
பூர்க்கமுநல்மரத்தின் புறத்தொளிவைத்தானுரித்தோர்

வீணிலேபூடுகளை விருட்சங்களைமுறித்தோர்
ஊனுகின்றகால்முறித்தே யோடாமற்செய்வர்கள் ௩௱௰

தம்பமாய்ச்சீவசெந்தின் சங்கங்களையுடைத்தும்
கொம்புகளைமுறித்துங் கொடும்பாவம்செய்தவற்கு

வாசங்கள்வந்து வழங்காமற்கால்கைகள்
கூசலுடன்னிருங் குளுரும்வருமென்றனரே

பலபேர்வயிரெரியப் பண்ணிவைத்தபாவிகட்கும்
நலஞ்சேர்பெரியோரை நடுநடுங்கிப்பேசினர்க்கும்

மாறுமனக்கவடு வைத்துவெகுபேரைச்
சீரழிவுசெய்தவர்க்குஞ் சிலர்பசிக்கவுண்டவர்க்கும்

சண்டாளத்துவங்கள் சதாகாலஞ்செய்தவர்க்கும்
மிண்டானகுன்ம வியாதிவந்தருழுமென்றார்

பட்சிமிருகங்கள் பாம்புமுதலானதனை
மெச்சிப்பிடித்தடைத்தால் விலங்கவர்க்கேயெய்துமென்றார்

சாலப்பலவுயிரைக் தண்ணீரினண்டுகளை
காலமுறித்தவர்க்குக் கால்கைமுடங்குமென்றார்

ஒப்பனையானவை.

வெடுக்கென்றசொல்லானை மேலோரகத்தில்வைத்தால்
படத்தையுங்கட்டியதில் வங்குரங்கைவைத்ததொப்பாம்

எண்ணுமல்வஞ்சகப்பெண் ணின்சொல்லைநிச்சயித்தால்
மண்குதிரைதனைநம்பி யாற்றினிற்சென்றதொக்கும்

அகாமியமுள்ளாரெனினு மறிவாளரைசேர்ந்தால்
மகாமேருவைச்சேர்ந்த வானதனைநிகர்ப்பார் தூக

தன்னவரேயானாலுஞ் சார்பரிந்துசேர்தல்நன்று
துன்னுசுடர்விளக்கெனினுந் தூண்டுகோல்வேணுமதாம்

கடவுள்விதிவெல்லாக் கடவரெவராருமில்லை
மடவிலேயிட்டாக்கால் குடவிலேதங்காதே

நிலையாமனிலமனடி நேர்ந்தாற்குறையுளதோ
மலைமேலிருப்பவரை வந்துபன்றிபாய்ந்திடுமோ

பெரியோர்திருவுளந்தான் பேதித்தலார்தீர்ப்பார்
கரிமலைசாய்ந்தால்மண் கட்டியதுதாங்கிடுமோ

கடந்தெவருஞ்சொல்லாத காலம்வெல்லப்போகாது
உடைந்தசங்கில்சற்றுமொரு வோசைபரியாது

மட்டிகட்குநல்லபுத்தி வர்ணித்துசொன்னாலும்
இட்டமுற்றதன்குணம்போர் செய்யாதுநற்குணந்தான்

கடையால்மேலோர்க்குக் கருமங்களும்விழலாம்
முடப்பதுதண்ணீரில் முக்கலத்தையருக்கும்

வலியோரைச்சார்ந்தவர்கள் மற்றெவர்க்குமஞ்சுவரோ
மலையேதான்லெக்கானல் குருடனெய்யமாட்டானே

தலையானோரைச்சேர்ந்தால் தாழ்வில்லைதாழ்வுவந்தால்
புலிக்கடுமைபட்டுக் கறிக்காசைபட்டதொக்கும்

மெலிவாகினுமேலோர் மேற்செயலேசெய்வார்
புலிபசித்தாலெப்போதும்புல்லருந்தமாட்டாது

விற்பனமேலோர்கள் மெலிவாகிப்போகிலென்ன
குப்பையிலேபோட்டாலுங் குன்றிமணிமங்காதே

நேசருடன்பிறந்தோ ரிரண்டுபேர்வேறுபட்டால்
ஊசியிலேகப்பாகி நூல்நுழையாவாராகும்

ஏர்க்காதவைசெய்தா லிகழ்ச்சியென்றும்போகாது
ஊர்வாயைமூட வுலைமூடிதானுமுண்டோ

எட்டாக்கனியதனுக் கோராசைபட்டுமென்ன
தொட்டுக்காட்டாதவித்தை சொட்டுபோட்டால்வருமோ

நாட்டுச்சுரைக்காய்கறிக்கு நாட்டினாலெய்துமது
ஏட்டுச்சுரைக்காய்கறிக் கெய்தாதொருநாளும்

மாறுபாட்டுக்காரன் வாக்குநிசமென்றிருந்தால்
ஏறிவிட்டேயேணிதனை யெடுத்துவிட்டவாறாகும்

வாழ்வுடையோர்முன்னே வறுமையுற்றோர்சொல்நிலைபா
ஏழைசொல்லம்பலமு மேறாதுகண்டீரே

கொடையாளியேவறுமைக் குள்ளாகிலுமீவன்
கடுகுசிறுத்தாலுங் காரமதுபோகாதே

விற்பனக்குருமூடன் மேலாம்பரமானால்
குப்பையுயர்ந்து கோபுரமுந்தாழ்ந்ததொக்கும்

இட்டமுறவாழ்ந்தோர்க் கியல்புகப்புங்காலம்
கெட்டவர்க் குற்றார் கிளைதனிலுமில்லையில்லை

இணக்கமுடன்நல்லபுத்தி யெவ்வளவுங்கேளார்க்குறைத்தால்
பணத்துக்கோரம்புகொண்டு பாழிலெய்தவாறாகும்

காலிபயிர்தின்னாமற் காப்பதுவேவேலியுமாம்
வேலிபயிர்தின்றால் விளைவதொருபோதுமில்லை

நிலையானகாரியமு மில்லாதுமந்திரத்தால்
கலைப்பார்கலைத்தாக்கால் முலைப்பால்மருந்தல்லவோ

கூடாவொழுக்கமகளிர்.

பார்ப்பளவில்திரும்பிப் பாராளுரைத்தமொழி
கேளாள்மருவிகள் யேதுவுமேசொல்லாளாம்

மநுநீதி காதல்.

கள்ளன்போல்மற்கட்டிக் கவிழ்ந்தாலுமல்புரிவாள்
உள்ளன்புக்கார ருடன்போயுஞ்சண்டைசெய்வாள்
ஆடையுடனாபரண மடைக்காய்முதல்கொடுத்தாள்
நாடாள்புரங்கையி லைலதனைத்தட்டுவளாம்
அங்கையாற்றெருட்டா லாடரம்போற்சீறி
சங்கைகெடப்பேசிச் சத்துருவைபோல்பார்ப்பாள்
அயலாருடனேவிளை யாடியேகூடுவளாம்
மயலாய்க்கணவன்பிடித்து மருவச்சரசஞ்செய்தால்
மெய்யதிலேநோய்கள் மிகவெனவுந்தர்க்கமிட்டு
பொய்யாணையிட்டுப் புறங்காட்டியேபடுப்பாள்
முந்தியுறங்கிப்பெரு மூச்சுவிட்டுளத்தனைபோ
சந்தோஷஞ்சொன்னாலுஞ் சற்றேனுமேபிறங்காள்
ஆரிடத்திற்போடாவென் றவன்கொடுப்பதையெறிந்து
சீறிச்சினந்து தெய்வமேயென்றழுவாள்
நாடானதிற்பெண்கள் நான்குவகைச்சாதியிலுங்
கூடாவொழுக்கங் குறையிதுவாமென்றனரே

அபியுற்றமகளிர்.

ஆடவர்களெந்நாளு மாசைகொண்டபெண்குறிப்புங்
கூடுமொழுக்கக் குறிப்பதனைச்சொல்லுகிறோம்
பலநாளுமாடவனைப் பார்த்தகண்ணாயிருப்பாள்
தலைவனவனைப்பார்க்கில் தலைகவிழ்ந்துமேசிரிப்பாள்
உள்ளன்புகாட்டா ளோங்கிபெருமூச்சுவிட்டு
தள்ளாக்குழந்தை தனைத்தழுவிமுத்தமிட்டு
பாங்கியரைத்தழுவாள் பாங்கனைப்பார்த்துநகைத்துப்
பாங்காய்தலையசைத்துப் பல்லைக்கடித்துறுக்கி
பிறரெவரையும்நிறுத்திப் பேசுவதுபோல்பேசிப்
பிறகால்போய்மூக்கைப் பிசைந்துதும்மல்தும்மி
தலைவனன்புவைத்தாலுந் தன்னுடன்பொய்யென்று
தலைவன்மொழிகேட்டுமவன் தன்றொழிலையுமகிழ்ந்து
ஆண்டவன்வீட்டுக் கடிக்கடிதான்போவதல்லால்
ஆண்டவனைக்கண்டா லறக்கணிசிநாணுதலும்

கொம்பனையார்க்குள்ளன்பு குறிப்பறிதலாகுமென்று
முன்பாகநூலுகளில் முன்னோருறைத்தனரே

பெண்களுடையதத்துவம் பத்துக்கும்விபரம்.

மிக்கயிந்நூலில் மேன்மைகுறிப்பறிய
தக்கதொருபெண்கள்பத்து தத்துவத்தைச்சொல்லுகிறோம்

பொன்னிறமுமல்லிகையின் பூமணமுந்தாமரையும்
வன்னமலர்முகமு மாசற்றமுர்தமொழி

தனதானியவாழ்வுஞ் சார்ந்தசனசேகரமும்
இனமோவொழ்பவ ளிவள்தெய்வதத்துவமாம்

இரக்கம்வணக்க மின்பமுறுதேகம்
சிறக்கவேதானதர்மந் தெய்வவிசுவாசம்
வன்கொலைகண்டஞ்சுமவள் மானிடர்க்குள்தத்துவமாம்
முன்சொல்லும்நூலதனில் முறையிலுரைத்தனரே

நித்திரைமிகுத்தல் நெடுமூச்சுசோம்பல்களும்
மெத்தவேகொட்டாவி விடெல்லாம்போய்த்திரிதல்
சுத்தமில்லாதேகஞ் சுசியில்லாபோசனமும்
நத்துகின்றமின்னாள் நரகதத்துவமாகும்
ஆற்றில்குளத்தி லலைகடலிலேயனையி
லேற்றமிகுபெண்களுட னென்றும்விளையாடமனம்
நாணமில்லாமை யென்னுளுங்கொடுங்கோபம்
வானுதலாலேயியக்க மாதென்றுசொல்லுவதாம்
பரிமளசுகந்தாதி பகரிரத்னவாபரணம்
சரசசங்கீதவித்தை தன்னில்வெகுவிருப்பம்
சார்ந்ததினமுந் தர்மசிந்தைதகற்புடையாள்
காந்தர்வதத்துவத்தின் கன்னியென்றுசொல்லிடலாம்
வெட்கமில்லாமை மிகுந்தபலபோசனமுந்
துற்கந்தவாசந் துடியானவார்த்தைகளும்
ஊட்டினசரீர முடையழுக்குமாமிசமு
முட்டமதுவுண்ணல் முறையில்லாதர்டத்தை
நித்திரையில்லாமையிவை சேர்ந்தபெண்ணுமேபேயின்
தத்துவமாமென்று சாற்றினார்முன்னோர்கள்

அக்கினிகண்ணு மழகுசற்றுமில்லாமை
வக்கணையாயாடவரை வலியப்பிடித்திழுத்தல்
மாறுபாடானமன மல்லுகட்டிப்புணரும்
நாரியவள்தானே ராட்சதரின்தத்துவமாம்
ஆரிடத்திலானு மன்புசற்றுமில்லாமை
மாறிமாறிப்பார்த்தால் மயிர்தூவுதூறுதலை
வேறுமுகம்பசியு மிகுந்தபயமுடையாள்
காகத்தின்தத்துவத்தில் கன்னியவளாகுமென்றாள்
கூடுகின்றவாடவரை கூர்நகத்தார்பல்லதனால்
நாடிக்கடிப்பதுவு நாணஞ்சற்றில்லாமை.
நிறமதுவும்பங்கமதாய் நேத்திரத்தாய்மருட்டல்
குறங்கினுடதத்துவத்தின் கொம்பனையாளாகுமென்றான்
திண்டுமிண்டானசொல் தேகசுத்தமில்லாமை
வண்டிவெடுத்தகுரல் மல்லுகட்டிபுணர்தல்
மழுமாரிகண்டவரை வலியப்பிடித்திழுப்பாள்
கழுதையின்தத்துவத்தின் கன்னியவளாகுமென்பார்
வையகத்திலேமேலா மணவாளன்சொன்னபடி
மொய்க்குழலார்சாதி மூன்றின்குறியுரைப்போம்
மானைநிகர்த்தவிழி வனசமலர்முகமுந்
தேனைநிகர்த்தமொழி தேமற்படர்ந்தவுடல்
சுருண்டுநெறிந்தகுழல் தும்பிப்படைநடையுந்
திரண்டகோவைக்கனிவாய் செண்பகப்பூந்தேகமுமாம்
மின்னிடையுந்தென்ன மிளம்பாளைவாசமுமாய்
அன்னநடையு மழகில்ரதியெனவும்
வட்டமாய்த்தங்கநிற மானவிளமார்பும்
இட்டமுறுகல்விக் கிசைந்திட்டசற்குணமும்
தர்க்கமிடுமின்கோபி சாப்பாடுமற்பமதாம்
இக்குறியின்மாதவளு மின்பமுளமான்சாதி

பெட்டைக்குதிரைசாதி.

உயர்ந்துகுளிர்ந்தஉச்சி யுட்குழிந்தகன்றகண்கள்
உயர்ந்துபருத்தகொங்கை யுதடுபெருத்திருக்கும்

சாலப்பருத்தமயிர் தந்தமோநீண்டிருக்கும்
தாலவிடைபருத்துத் தாருபோலேவுயிரும்
அடக்கமொன்றுமில்லாமை யல்குல்பணைத்திருக்கும்
மடக்கொடியாள்பேசுகின்ற வாய்மைகுளறுதலாம்
போசனத்திலேபிரியம் புணர்ந்தவர்மேலும்பிரியம்
வீசும்புலால்நாற்ற மிரவுபகல்நித்திரையும்
தீராவெறுப்புஞ் சிவந்தபருவுநடுங்
கூறுணமாதுபெட்டைக் குதிரையென்றுசொல்லினரே

பிடியானைச்சாதி.

சாலப்பருத்தநெற்றி தாடைசெவிநாசி
காலுடனேகைத்தாளுங் கழுத்துமிகப்பருத்து
சுருண்டுசிவந்தமயிர் தொங்குமதரமுமா
முரண்டுநிகஞ்சண்டை மொழியுமிடிபோலாய்
அல்லும்பகலும்கல்வி யானதிலேசிந்தையுமாய்
பல்லுமிடையுளதாய்ப் பாவத்துக்கஞ்சாமை
யார்க்குமனுகூலி யானைமதநாரி
பார்க்கும்பனிரண்டு அங்குலமாமல்குலது
விடியளவுஞ்சண்டைவிடாள் வெட்கத்துக்கஞ்சாளாம்
பிடியானைசாதியென்று பேசினர்முன்னோர்கள்
இன்னம்சிலநீதி யெடுத்துமேகூறவென்றால்
வன்னமாயிந்நூல் வளருமெனமுடித்தேன்

வாழி.

ஐங்கரனும்வாழி ஆறுமுகன்வாழி
மங்கைபாகன்வாழி மாயன்பிரமன்வாழி
தூயமுனிவோர்வாழி சுத்தசைவர்வாழி
நேயசெங்கோல்செலுத்தும் நிருபர்மிகவாழி
கற்புடையமாதர் கவிவாணர்தாம்வாழி
விற்பனமாயிதைப்படிக்கும் வித்தகரும்வாழியவே.

மநுநீதிகாதல்.

முற்றிற்று.

உ

கடவுள்துணை.

அட்டவணை.

அட்டவணை.

முற்றிற்று.

—(*)—

உ

கடவுள்துணை.

அறிக்கை.

இவ்வுலகின் மாட்சிமைதங்கிய நேசர்களே முன்னோர்களாலுண்டான நீதிநூல்களிற்சொல்லியசாரங்களைத் தெளிந்தெடுத்தூச்சகலருக்குமுபயோகமாகும்பொருட்டுச் செய்யுளாக வியற்றி மநுநீதி காதலென்று பெயர்கொடுத்திருப்பதால் இந்நூலை இந்நாட்டிலுந் தென்னுட்டிலுமுள்ள தமிழ்ப்பாடசாலை உபாத்தியாயர்கள் சிறுவர்களுக்குக் கற்பிப்பார்களாகில் நீதிகளை எளிதி லறிவார்கள் வேறு நூல் பார்க்கவேண்டுவதில்லை இதன்றி கற்றவர்களும் கனவான்களும் தனவான்களும் இதைப்பார்வையிட்டால் வெகுவிஷயங்களை எளிதிலறியலாம்.

—(*)—